வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 09.01.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 35 | பக்கங்கள் : 20






07
உலக ஒழுங்கின் மாற்றமும் ஈழத் தமிழர் அரசியலும்!



08
ஆஸியை அச்சுறுத்தும் ஒமைக்ரோன்



09
தைப்பொங்கல் தமிழர்களின் திருநாள்



11
விவாகரத்து செய்யப்போவதை மகளிடம் சொல்வது எவ்வாறு?

# யாழ்ப்பாண நாகவிகாரை காணி சிவன் கோவிலுக்கு சொந்தமானது!

## சீ.வீ.கே. சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 09

யாழ்ப்பாணம் நாகவிகாரை அமைந்துள்ள காணி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் ஆலயத்துக்கு உரித்தான காணி என வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

டான் தமிழ் ஒளியில் நேற்றிரவு ஒளிபரப்பான நெற்றிக்கண் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். 19



## பெரும்பான்மையை இழந்துவிடாது அரசு

### அடித்துக் கூறுகிறார் ஷெஹான்

கொழும்பு, ஜன. 09

குறிப்பிட்ட அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் பதவி விலகினாலும் அரசாங்கத்துக்கு பெரும்பான்மைப் பலம் உள்ளது என இராஜாங்க 19

## தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் சங்கரிக்கு எதிராக 'போர்க்கொடி'

யாழ்ப்பாணம், ஜன. 09

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் குழப்பகர மான நிலைமையொன்று தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று சனிக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டமொன்று கிளிநொச்சியிலுள்ள அலுவலகத்தில் 19

## அரசாங்கத்தை ஒருபோதும் தோல்வியுற விடமாட்டோம்

### அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன

கொழும்பு, ஜன. 09

அரசாங்கம் தோல்வியடையவில்லை என துறைமுக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கம் 50 19

## சீன வெளியுறவு அமைச்சர் கொழும்பை வந்தடைந்தார்

கொழும்பு, ஜன. 09

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று மாலை இலங்கை வந்தடைந்தார். 19

## முல்லைத்தீவு வைத்தியசாலை பெண் ஊழியர் மீது தாக்குதல்!

முல்லைத்தீவு, ஜன. 09

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிற்றூழியராக கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவர் மீது ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் காட்டுப்பகுதியில் வைத்து தாக்குதல் முயற்சி மேற் 19

## கோட்டாபய அரசு உடன் பதவி விலகவேண்டும்!

### சஜித் மீண்டும் வலியுறுத்து

மன்னார், ஜன. 09

பணவீக்கம் அதிகரித்துச்சென்றால் சிம்பாபே நாட்டில் ஏற்பட்ட நிலைமையே இலங்கையிலும் ஏற்படும் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்துள்ளார். 19

## லசந்த படுகொலைக்கு நீதி கிடைப்பது கஷ்டம்

### சாணக்கியன் எம்.பி. கூறுகிறார்

மட்டக்களப்பு, ஜன. 09

படுகொலை செய்யப் பட்ட லசந்தவுக்கு எதிராக அன்று பாதுகாப்புச் செயலாளராக இருந்த ஜனாதிபதி வழக்கு தாக்கல் செய்திருந்தார். 19

## சந்திரிகாவுடன் சுசில் சங்கமம்!

கொழும்பு, ஜன. 09

பதவி நீக்கம் செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, 19

## இந்திய மீனவர் அத்துமீறலுக்கு எதிராக கொழும்பில் போராடுவதற்கு தீர்மானம்

### வடக்கு - தெற்கு மீனவ அமைப்புகள் கூட்டாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 09

இந்திய மீனவர் பிரச்னை தொடர்பாக தலைநகர் கொழும்பில் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தயாராக இருக்கிறோமென வடக்கு மற்றும் தெற்கு மீனவ அமைப்புகள் கூட்டாக தெரிவித்தன.

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்துடன் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் 19



## பொருள் தட்டுப்பாடு நிலவினாலும் மக்களுக்கு விநியோகம் தொடரும்

### யாழ். வணிகர் கழகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 09

யாழ்.குடாநாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவினாலும் மக்களுக்கான பொருட்களின் விநியோகம் தொடர்ந்து இடம்பெறும் என யாழ்.வணிகர் கழகத் தலைவர் அ.ஜெயசேகரன் தெரிவித்தார். 19

## இப்படியும் நடக்கிறது...!

அண்மையில் இந்திய சஞ்சிகை ஒன்றில் படித்த துணுக்கு ஒன்றுதான் அந்தச் செய்தியைப் படித்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

ஒருவர் சொல்லுவார், என்னுடைய அகராதியில் முடியாது என்ற வார்த்தையே கிடையாது என்று.

அதற்கு அவரது நண்பர் சொல்லுவார், இப்போ சொல்லி என்ன பிரயோசனம், அது நீ அகராதியை வாங்குவதற்கு முன்னர் அல்லவா பார்த்து வாங்கியிருக்க வேண்டும் என்று.

அண்மையில் இலங்கைக்கு தமது 'ஹனிமூனைக்' கொண்டாட வந்திருந்த தம்பதியர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர் என்பதுதான் அந்தச் செய்தி.

இந்தியாவின் ஹைதராபாத் நகரத்திலிருந்து தமது திருமணம் முடிந்ததும் 'ஹனிமூனுக்காக' இலங்கை வந்திருந்த தம்பதியர், ட்ரோன் கமராவை பயன்படுத்தி தம்மை படம்பிடித்தபோது கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

பொலிஸாரிடம் முறையான அனுமதியைப் பெறாமல் ட்ரோன் கமரா பயன்படுத்துவது இலங்கையில் தடைசெய்யப்பட்டிருக்கின்றது.

அந்த தம்பதியர் அனுமதி பெறாமல் ட்ரோன் கமராவை பயன்படுத்தியதாக கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர்.

ஐம்பதாயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிமன்றம் படம்பிடிக்கப்பட்ட புகைப்படங்களில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான படங்கள் எதுவும் இல்லாததால் கமராவை திருப்பிக்கொடுக்க உத்தரவிட்டது.

இந்த விடயத்தை இந்தப் பத்தியில் எழுதுவதற்கு காரணம், இந்த செய்தியின் சுவை கருதியல்ல.

நமது நாடு இன்று எதிர்நோக்கும் மிகப்பெரிய நெருக்கடி பொருளாதார நெருக்கடியே. அன்னியச் செலாவணி வருமானத்திற்கு சுற்றுலாத் துறையையே மலைபோல நம்பிருக்கும் நமது நாடு, கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனாவால் முற்றாக அந்த வருமானத்தை இழந்திருக்கின்றது.

இரண்டாயிரத்தி பதினெட்டாம் ஆண்டு சுற்றுலாத் துறையால் மாத்திரமே சுமார் ஐந்து பில்லியன் டொலர்கள் நாட்டிற்கு வருமானமாக கிடைத்திருந்தது. அது, பத்தொன்பதில் ஈஸ்டர் குண்டு வெடிப்பாலும், அதன் பின்னர் கோவிட் பெருந்தொற்றாலும் முற்றாக முடங்கி விட்டது.

இன்று நாட்டின் டொலர் இருப்பு முற்றாக முடிந்து போய், வெளிநாடுகளிலிருந்து எந்த பொருட்களையுமே (அத்தியாவசிய உணவுப் பொருட்களையும்தான்) வாங்க முடியாத நிலையில் இருக்கின்றது.

ஆனால் எந்த வருமானத்தை நம்பியிருக்கின்றோமோ, அதனைக் கூட நேர்த்தியாக செய்யும் நிலையில் நாடு இல்லை என்பதையே அந்தச் சம்பவம் உணர்த்துகின்றது.

ஒருவர் சுற்றுலா வருகிறார் என்றால் அவருக்கு ட்ரோன் கமராவில் படம் எடுப்பதற்கு அனுமதியில்லை என்பது தெரிந்திருக்கமுடியாது. அவ்வாறு அவர் தவறுதலாக எடுக்கின்றபோது, அவர் எடுத்த புகைப்படங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவை இருக்கிறதா என்பதை பார்த்துவிட்டு பொலிஸாரே அவர்களை அனுப்பியிருக்கலாம்.

ஊர்க்குருவி ஒரு தடவை வெளிநாட்டிற்கு சென்றுவிட்டு டுபாய் வழியாக கொழும்பு வந்தபோது, டுபாயில் தீர்வையற்ற கடையில் சிகரெட்டுக்களை வாங்கிக் கொண்டு கொழும்பு வந்தபோது, சுங்கத்துறையினர் சிகரட்டுக்களைகொண்டு வரமுடியாது என்று கூறிவிட்டனர்.

சிகரட் வாங்கிவரக்கூடாது என்று எங்கேயும் சொல்லப்படவில்லையே என்று சுங்கப் பகுதியினருடன் மல்லுக்கட்டிய பின்னர் இனி கொண்டுவரக்கூடாது என்று எச்சரிக்கையுடன் அனுப்பிவைத்தனர்.

வெளிநாடுகளிலிருந்து வாருங்கள் வாருங்கள் என்று வருந்தி அழைக்கும்போது எதைச் செய்யக்கூடாது என்பதையாவது விருந்தினர்களுக்கு முற்கூட்டியே சொல்ல வேண்டாமா? அந்த தம்பதியர் ட்ரோன் கமராவையும் விமானநிலையத்தினூடாகத்தான் கொண்டுவந்திருப்பார்கள்.

இவற்றை இந்தப் பத்தியில் எழுதுவது நமது புலம்பெயர்ந்தோர் இதுகுறித்து எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்பதற்காகவே.!

- ஊர்க்குருவி.

# இரட்டை வேடம் வேண்டாம் உடனேயே வெளியேறுங்கள்!

## சு.கவை விரட்டுகிறது மொட்டு கட்சி

கொழும்பு, ஜன. 09

"அரசுக்குள் இருந்து கொண்டு இரட்டை வேடம் போடவேண்டாம். அரசை விமர்சிப்பதாக இருந்தால் அரச கூட்டணியில் இருந்து வெளியேறுவதே உகந்த செயலாக இருக்கும்."

- இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன.

இது தொடர்பில் அவர்



மேலும் கூறியவை வருமாறு:

2015 இல் அப்பம் சாப்பிட்டுவிட்டு இந்த பக்கம் இருந்து அந்த பக்கம் தாவியவர்களை மறக்கமாட்டோம். இந்த அரசு சரியில்லையென நினைத்தால், அரசிலிருந்து வெளியேறி எதிரணி பக்கம் அமர்வதே சிறப்பு.

நல்லாட்சி எனக்கூறிக் கொண்டு ரணிலுடன் சென்றனர். இன்று ரணில் தரப்பே இவர்களின் முகத்திரையை கிழித்து தொங்கவிட்டுள்ளது. ஊருக்குச்சென்று கட்சியைப் பலப்படுத்துங்கள். ஆனால் அரசுக்குள் இருந்துகொண்டு இரட்டை வேடம் போட வேண்டாம் - என்றார். (அ)

## மேலும் 176 பேர் பூரண குணம்

கொழும்பு, ஜன. 09

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 176 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 566,936 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 590,651 அதிகரித்துள்ளது. (அ)

## சாரதி அனுமதிப் பத்திரங்கள்; காலாவதி தினங்களில் மாற்றம்

கொழும்பு, ஜன. 09

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்கள் காலாவதியாகும் தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகன சட்டத்துக்கமைய போக்குவரத்து அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் "2021 ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிலிருந்து 2022 மார்ச் மாதம் 31 ஆம் திகதி இறுதிவரையான காலப்பகுதிக்குள் காலாவதியாகும் சகல சாரதி அனுமதிப் பத்தரங்களினதும் செல்லுப்படியாகும் காலம் காலாவதியான தினத்திலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் தினம் மற்றும் நேரத்தை ஒதுக்கிகொள்ளும் சேவையினூடாக, நாளொன்றை ஒதுக்கிகொள்ளும்போது குறைந்தபட்சம் 13 நாட்களுக்கு பின்னரே தினமொன்று வழங்கப்படுவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

(அ)

## கல்கிசை வீடொன்றில் தீ; இளைஞர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 09

கஸ்கிஸ்ஸ சொய்சாபுர பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்ட தீ விபத்தில் தீக்காயங்களுக்கு உள்ளான இளைஞர் ஒருவர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சொய்சாபுர பகுதியைச் சேர்ந்த 19 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.



## ஜயஸ்ரீ மஹா போதியில் ஆசி பெற்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முற்பகல் வரலாற்றுச் சிறப்புமிக்க ஜயஸ்ரீ மஹா போதியை வழிபட்டு, ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

புண்ணிய ஸ்தலத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, அட்டமஸ்தானாதிபதி கலாநிதி வணக்கத்துக்குரிய பல்லேகம சிறிநிவாச நாயக்கத் தேரரைச் சந்தித்து அவருடைய நலன் விசாரித்தறிந்தார்.

ஜயஸ்ரீ போதியை வழிபடுவதற்காக வருகை தரும் யாத்திரிகர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டு வரும் வாகனத் தரிப்பிடத்தின் நிர்மாணப்பணிகள் தொடர்பில், அட்டமஸ்தானாதிபதியுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

ஜயஸ்ரீ மஹா போதிக்கு அருகில், மஹா சங்கத்தினரால் பிரித் பாராயணம் செய்யப்பட்டு ஜனாதிபதிக்கு ஆசிர்வாதம் வழங்கப்பட்டது.

இம்முறை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றவிருக்கும் பெருந்தொகையான மாணவர்கள், ஜயஸ்ரீ மஹா போதியை வழிபாடு செய்ய வருகை தந்திருந்தனர். அவர்களின் அந்தப் பரீட்சை நடவடிக்கைகளுக்கு, ஜனாதிபதி ஆசிர்வாதமளித்தார்.

அங்கு வருகை தந்திருந்த மக்கள், ஜனாதிபதியைக் காண்பதற்கும் அவருடன் கலந்துரையாடுவதற்கும் பெரிதும் ஆர்வம் காட்டினர். ஜனாதிபதிக்கு அருகில் சென்று நலன்களைக் கேட்டறிந்து கொண்டார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

## நேற்றும் இன்றும் மின்தடை இல்லை

கொழும்பு, ஜன. 09

நாளாந்தம் மின் தடங்கல்கள் ஏற்பட்டுவரும் நிலையில் நேற்றும் இன்றும் மின்தடை ஏற்படுத்தப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை இந்த அறிவிப்பை வெளியிட்டது.

எரிபொருள் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை மின்சார சபைக்கு உராய்வு எண்ணெய் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனை அடுத்து மின் துண்டிப்பு நடவடிக்கை கைவிடப்படுவதாகவும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

இரண்டு நாட்களை மட்டும் அழுத்தி தெரிவித்துள்ளமையால் வார நாட்களில் மின்தடை தொடரக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.(அ)

ஈழநாடு
Eelanadu
09.01.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மைத்திரியின் எதிர்ப்பும் மைத்திரிக்கான எதிர்ப்பும்?

அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சிகளில் ஒன்றான – சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் நாட்கள் எண்ணப்படுகின்றனவா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஆற்றிய உரையொன்றில், அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்திருக்கின்றார். தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் சிறைக் கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர் – சில, சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 20ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட வேண்டும். ஜனநாயகம் வீழ்சியடைந்துள்ளது. இதன் காரணமாக அரசாங்கம் சர்வதேசத்தின் ஆதரவை இழந்துள்ளது. – இப்படி பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டி, அரசாங்கத்தை கடுமையாக தாக்கியிருக்கின்றார். அதேவேளை, எதிர்காலத்தில் ஒன்றிணைந்த அரசாங்கமொன்றை அமைக்க தான் எண்ணியுள்ளதாகவும் மைத்திரிபால தெரிவித்திருக்கின்றார்.

இதனைத் தொடர்ந்து மைத்திரியை அரசாங்கத்திலிருந்து அகற்ற வேண்டுமென்னும் கோரிக்கைகள் மொட்டு அணிக்குள் அதிகரித்திருக்கின்றன. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும், மொட்டு அணியினருக்கும் இடையில் ஏற்கனவே முரண்பாடுகள் இருக்கின்றன. மைத்திரியின் தற்போதைய உரையை தொடர்ந்து இந்த முரண்பாடுகள் உச்சத்தை அடைந்திருக்கின்றன.

அரசாங்கம் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொண்டுவரும் நிலையில், இந்த நெருக்கடிக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை – இது முற்றிலும் ராஜபக்ஷக்களின் தோல்வி என்பதை வெளிப்படுத்தும் வகையிலேயே, பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கருத்துக்களை தெரிவித்துவருகின்றனர். சிங்கள மக்களின் எதிர்ப்பை சம்பாதித்துவிடக் கூடாதென்பதில் அவர்கள் கவனம் செலுத்த முற்படுவது போல் தெரிகின்றது. அதேவேளை, தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகளின் விளைவாக, ஜனாதிபதி, எப்போது வேண்டுமானாலும், பங்காளிக் கட்சிகளுக்கு எதிராக திரும்பலாம்.

இந்த பின்னணியில் – ஒரு வேளை, அரசாங்கத்திலிருந்து தாங்கள் வெளியேறினாலும், தாங்கள் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்பட்டுவிடக் கூடாதென்பதில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் தான் மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்தின் அங்கமாக இருந்து கொண்டே, அரசாங்கத்தை கடுமையா சாடியிருக்கின்றார். இதனால் ஜனாதிபதி அல்லது மொட்டு தரப்பு தனக்கு எதிராக திரும்பும் என்பதை தெரிந்து கொண்டே, மைத்திரி இவ்வாறு செயற்படுகின்றார்.

மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் ஆகா – ஓகோ – என்று கூறுமளவிற்கு விடயங்கள் நடக்காவிட்டாலும் கூட, அவரது அரசாங்கம் சர்வதேசத்தின் நம்பிக்கையை பெற்றிருந்தது. அதேவேளை, குறைபாடுகள் இருந்தாலும் மைத்திரி தமிழ் மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருந்தார். ரணில் – மைத்திரி உள் மோதல்களால் அரசாங்கம் வீழ்சியடையும் வரையில், மைத்திரி தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் எவரும் விரல்நீட்டவில்லை. அதேவேளை, ரணில் – மைத்திரி முரண்பாட்டின் போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடுநிலை வகிக்கவில்லை. இதுவும் மைத்திரி, கூட்டமைப்பின் மீது அதிருப்தியடைந்தமைக்கு ஒரு காரணமாகும்.

ஆனால் தற்போதைய அரசாங்கம், நெருக்கடி நிலையை சமாளிக்க முடியாமல் தடுமாறுகின்ற போது, மைத்திரி ஒப்பீட்டளவில் வல்லவராகவும் பலருக்கும் தெரியக் கூடும். ஏனெனில் மைத்திரியை பலரும் ஆளுமை குறைந்த ஜனாதிபதியாகவே உற்றுநோக்கியிருந்தனர். ஆனால் தற்போதை சூழலோடு, முன்னைய நிலைமையை ஒப்பிட்டு சிந்திக்க முற்படுபவர்களுக்கு, மைத்திரி பரவாயில்லை போன்று தெரிந்தால் அது ஆச்சரியமான ஒன்றல்ல.

# வெளிநாட்டவர் வசிக்கும் பகுதிகளை 'சுத்திகரிக்கும்' நேரம் வந்துவிட்டது!

## வலெரியின் கூற்றால் பெரும் சர்ச்சை

**குமாரதாஸன் - பாரிஸ்**

நாட்டில் காட்டுமிராண்டித்தனமாக சட்ட மீறல்கள் இடம்பெறுகின்ற பகுதிகளை - வெளிநாட்டவர்கள் மாத்திரம் வசிக்கின்ற வட்டகைகளை - "KÄRCHER" கொண்டு சுத்திகரிக்க விரும்புகிறார் என்று வலதுசாரி வேட்பாளர் வலெரி பெக்ரெஸ் கூறியிருக்கிறார்.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாகப் பத்திரிகை ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இந்தக்கூற்றை வெளியிட்டிருக்கி றார். "வீட்டின் நில அறையில் இருந்து KÄRCHER கருவியை மீண்டும் வெளியே எடுப்பதற்கு விரும்புகி றேன்" (Je vais ressortir le Kärcher de la cave) என்று அவர் கூறியிருக்கிறார்.



தண்ணீரை அழுத்திப் பாய்ச்சி அழுக்கு களைத் துப்புரவு செய்கின்ற கழுவும் கருவிகளில் Kärcher என்பது பிரபலமா னது. பிரான்ஸில் இந்த வர்த்த கப் பெயரிலான கழுவும் கருவிகள் அதிகம் பயன்படுத்தப் படு கின்றன. அதேசமயம் வெளிநாட்டவர்கள் தொடர்பான அரசியல் விவாதங்களிலும் அந்தப் பெயர் பிரபலமானது.

KÄRCHER கருவியின் பெயரைப் பயன்படுத்தி பெக்ரெஸ் வெளியிட்டுள்ள கருத்துக்கள் கண்டனத்துக்குள்ளாகி இருக்கிறது. 2005 ஆம் ஆண்டு அப்போது உள்துறை அமைச்சராக இருந்த மூத்த அரசியல் தலைவர் நிக்கலஸ் சார்க்கோசியே வெளிநாட்டவர்களது வன்முறைகளை ஒடுக்குவதற்காக அவர்கள் வசிக்கும் இடத்தை KÄRCHER மூலம் தூய்மையாக்க வேண்டும் என்ற கூற்றை முதலில் வெளியிட்டிருந்தார்.

தமிழர்கள் உட்பட குடியேற்றவாசிகள் அதிகமாக வசிக்கின்ற பாரிஸின் புறநகரமான டய ஊழரசநெரஎந (Seine-Saint-Denis) பகுதியில் சிறுவன் ஒருவன் கொலை செய்யப்பட்ட இடத்துக்கு நேரில் சென்றிருந்த சமயமே நிக்கலஸ் சார்க்கோசி அந்த நகரத்தை Kärcher மூலம் தூய்மைப்படுத்தவேண்டும் (nettoyer au Kärcher) என்று கூறியிருந்தார். அச்சமயத்தில் அவரது அந்தக் கருத்து அரசியலில் பெரும் சலசலப்பை உண்டுபண்ணி விவாதங்களைக் கிளப்பியிருந்தது.

அவரது கட்சி சார்பில் மக்ரோனை எதிர்க்கின்ற பொது வேட்பாளரான பெக்ரெஸ் அம்மையார் அதே கருத்தையே மீண்டும் வெளியிட்டிருக்கிறார்.

"இது வீதிகளில் சட்டத்தை நிலைநிறுத்துவதுடன் சம்பந்தப்பட்டது. அதற்காகவே Kärcher கருவியை வெளியே எடுக்க விரும்புகிறேன். ஏனென்றால் காட்டுமிராண்டிகள் புரிகின்ற வன்செயல்களைப் பற்றி முகத்துக்கு நேராகக் கதைக்க எவரும் தயாராகவில்லை " என்று வலெரி பெக்ரெஸ் தெரிவித்திருக்கிறார்.

பிரான்ஸின் அரசியலில் வெளிநாட்டுக் குடியேறிகளைக் கீழ்த்தரமாக மதிப்பிடுகின்ற வார்த்தைப் பிரயோகம் எனக் குறிப்பிடப்படுகின்ற சுத்திகரிப்புப் பெயரை (Kärcher) அவர் மறுபடியும் அரசியல் அரங்குக்குக் கொண்டு வந்திருப்பது சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

வலெரி பெக்ரெஸ் நாட்டின் பிரதான வலதுசாரிக் கட்சியைச் சார்ந்து பொது வேட்பாளராக அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறார். இரண்டாவது சுற்று வாக்களிப்பில் அதிபர் மக்ரோனைத் தோற்கடிக்கக் கூடிய ஒரே வேட்பாளர் அவரே என்பதை சமீபத்திய கணிப்புகள் வெளிப்படுத்தி உள்ளன.

பிரான்ஸின் அதிபர் தேர்தலுக்கு இன்னமும் நான்கு மாதங்களுக்கும் குறைவான காலமே இருக்கின்ற நிலையில் வைரஸ் பெருந்தொற்றைத் தவிர்த்து அரசியலில் தீவிரமான வேறு சில விவகாரங்கள் மீது வாக்காளர்களது கவனத்தைத் திருப்புவதற்குப் பிரதான வேட்பாளர்கள் முயன்று வருகின்றனர் என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர். ●

**தமிழர்கள் உட்பட குடியேற்றவாசிகள் அதிகமாக வசிக்கின்ற பாரிஸின் புறநகர் பகுதியில் சிறுவன் ஒருவன் கொலை செய்யப்பட்ட இடத்துக்கு நேரில் சென்றிருந்த சமயமே நிக்கலஸ் சார்க்கோசி அந்த நகரத்தை Kärche மூலம் துய்மைப்படுத்த வேண்டும் என்று கூறியிருந்தார். அச்சமயத்தில் அவரது அந்தக் கருத்து அரசியலில் பெரும் சலசலப்பை உண்டுபண்ணி விவாதங்களைக் கிளப்பியிருந்தது.**

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன் 09.01.2022 – 15.01.2022

ஜனவரி. 09 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 25

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | சப்தமி |

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மற்றவர் மத்தியில் உங்களின் புகழ் கூடும். வாழ்வில் புதிய பாதை புலப்படும். மகிழ்ச்சியான தகவல் கிடைக்கும். குடும்பத்தில் இனிய சம்பவம் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். மகன் அல்லது மகளுக்கு நல்ல செய்தி கிடைக்கும். மனதுக்கு பிடித்தவர்களுடன் பொழுதைக் கழிப்பீர்கள். முயற்சியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினருடன் வருத்தம் நீங்கி நெருக்கம் ஏற்படும். வீடு, நிலம் சம்பந்தமான முதலீடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நம்பியவர்களால் ஏமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பணியாளர்களுக்கு பணிச்சுமை குறையும். புதிய பொறுப்புகள் கிடைக்கப் பெற்று நல்ல முன்னேற்றம் அடைவீர்கள். குடும்பத்தினர், நண்பர்களுடன் குதூகலமாகப் பொழுது போகும். பணி அல்லது தொழில் பற்றிய முயற்சியில் தடை நீங்கும். குடும்பத்தில் பிரச்னைகள் குறையும். எந்த சூழ்நிலையிலும் தைரியத்தை விட்டு விட வேண்டாம். கொடுக்கல், வாங்கலில் அவசர முடிவு எடுக்க வேண்டும். புதிய தொழில் செய்யும் எண்ணம் சிலருக்கு உண்டாகலாம். பணியாளர்கள் வெற்றி வாகை சூடும் வாரம் இது.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

பணிச்சுமை அதிகரிக்கும். சம்பந்தமில்லாத இடத்தில் திடீர் கோபம் உண்டாகாமல் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. பணவரவு சீராக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. மனச்சஞ்சலம் குறையும். உறவுகள் வருகை குறையும். வயிறு சம்பந்தமான சிரமம் வந்து சரியாகும். குடும்பத்தாருடன் பழகி மகிழ்வீர்கள். வீண் அலைச்சல் குறையும். வருமானம் பெருகும். சகோதரர்களுக்கு உதவுவீர்கள். சாகசங்கள் செய்ய நினைக்க வேண்டாம். வீண்சச்சரவுகளைத் தவிர்ப்பது நல்லது. திடீர் அதிர்ஷ்டம் வரக் கூடும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உடல்நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டு. சேமிப்பு அதிகரிக்கும். செலவுகள் மிதமாக இருப்பதால் நிம்மதி பிறக்கும். பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். மனதில் புதுத்தெம்பும், உற்சாகமும் கூடும். புதிய பொறுப்பை நிறைவேற்றுவீர்கள். சிலருக்குத் திருமணம் அல்லது குழந்தைப்பேறு காரணமாக உள்ளம் மகிழும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. வாகன வசதி முன்பைவிடக் குறையும். நண்பர்களிடம் கடுமையாக பேச வேண்டாம்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

கடந்த கால முயற்சி ஒன்று பலன் தர ஆரம்பிக்கும். உழைப்பால் லாபம் கிடைக்கும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். கொண்டாட்டங்களால் மகிழ்ச்சி பொங்கும். பணவரவு அதிகரிப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். சிலருக்கு முன்பிருந்த ஆரோக்கியக் குறைபாடு நீங்கும்.வழக்குகளில் முன்னேற்றம் ஏற்படும். நீங்கள் செய்யும் சேவைகள் மக்களின் பாராட்டைப் பெறும். எதிர்பாலின நட்பின் மூலமாக ஆதாயம் கிடைக்கும். சிலர் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிப்பர்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

மனதில் தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். பொன்னான நேரத்தை வீணடிக்காமல் ஆக்கப்பூர்வமாகச் செலவிடுவது நல்லது. எதிர்பாலினத்தினரால் உற்சாகம் பெறுவீர்கள். அரசுப்பணியாளர்கள் அர்பணிப்பு உணர்வுடன் சேவை செய்வீர்கள். நன்மைகள் நடைபெறும். புதிய தொழிலைத் துவங்கும் எண்ணம் இப்போது வேண்டாம். உயர்பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர்நலனில் அக்கறை செலுத்தியதற்கு ஆதாயம் உண்டு.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முன்னேற்றத்தின் மீது நாட்டம் கூடி நன்கு உழைப்பீர்கள். பணவரவு அதிகரிக்கும். நல்ல காரணங்களுக்காகச் செலவு செய்வீர்கள். நேர்மை, கடின உழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் அகலும். தந்தையால் அனுகூலம் உண்டு. பணியிடத்தில் போதுமான ஆதரவு கிடைக்கும். உறவினர் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியமாகும். உடன்பிறப்புகளின் ஆதரவால் மகிழ்ச்சி பெருகும். கடந்த கால பிரச்னைகள் தீரும். பணவரவு திருப்தி தரும். உதவி செய்து மகிழ்வீர்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

கவலைகள் மறையும். குழந்தைகளின் திறமை கண்டு மனதில் மகிழ்ச்சி ஏற்படும். இல்லத்தில் நிம்மதி நிலைக்கும். நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். கடுமையாக உழைத்து வெற்றி பெறுவீர்கள். மனைவி அல்லது கணவர் மூலமாக முன்னேற்றத்துக்கான ஆலோசனைகள் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். முயற்சி வெற்றி பெறும். பிள்ளைகளால் கூடுதல் நன்மையும் மகிழ்ச்சியும் உண்டு. நவீனங்களை அறிமுகப்படுத்தித் தொழில் அல்லது வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

சுபவிஷயங்களில் இருந்த தடை, தாமதம் நீங்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களின் ஆதரவால் மனம் மகிழ்வீர்கள். திறமை மிக்க செயல்பாடுகளால் வெற்றியும், பாராட்டும் கிடைக்கும். அரசுப் பணிபுரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். பெண்களுக்கு நற்செய்தி கிடைக்கும். கடந்த கால சிரமங்களை மனதில் அசைபோட்டு மகிழ்வீர்கள். சமூகத்தில் அந்தஸ்தும் புகழும் உயரும். ஆவலுடன் எதிர்பார்த்திருந்த விஷயம் ஒன்று தாமதப்படும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

புதிய வகையில் திறமையை வெளிப்படுத்தி மற்றவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. அவ்வப்போது மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம். எதிரிகளின் தொல்லை முடிவுக்கு வரும். பணியிடத்தில்ஃ வியாபாரத்தில் நல்லவர்களின் ஆதரவு இருக்கும். எதிலும் நிதானமான முன்னேற்றம் இருக்கும். புதிய முதலீட்டால் லாபம் கூடும். வீண்செலவுகள் குறையும். நண்பரின் செயலால் நன்மை காண்பீர்கள். புதிய முயற்சிகளில் லாபம் இல்லாவிட்டாலும் எதிர்கால வளர்ச்சிக்கு வழி உண்டாகும். சேமிப்பு கைகொடுக்கும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். பெரிய மனிதர்களின் சந்திப்பு அனுகூலமாக இருக்கும். பணவரவு கிடைப்பதில் தாமதம் ஏற்படும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். சிலருக்கு வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்பட வாய்ப்புண்டு. உணவு, தூய்மை விஷயத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது, எதிர்பார்த்த பெரிய தொகை வந்து சேரும். எதிர்பார்ப்பு ஓரளவு நிறைவேறும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள் தங்களின் உழைப்பால் நன்மை அடைவார்கள்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

பொறாமைக்கு ஆளாக வேண்டாம். புதிய முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். சுபவிஷயம் கனிய ஆரம்பிக்கும். இளைஞர்களுக்குப் பொற்காலம் ஆரம்பமாகும். வீடு, வாகனங்கள் வாங்கி விற்பதில் லாபம் கிடைக்கும். கோயில் தரிசனத்தால் மனதில் நிம்மதி ஏற்படும். தொழிலில் எதிர்பார்த்த பணவரவு கிடைப்பது சந்தேகமே. பக்திமயமாகப் பொழுது கழியும். பணியிடத் தொல்லை தீரும். சமூக சேவை செய்யும் பாக்கியம் ஏற்படும். அண்டை வீட்டாரை அனுசரித்து நன்மை காண்பீர்கள்.

# மனப் பகிர்வு

பகிர்வு -11

கணபதி சர்வானந்தா

அறிவைப் பற்றிப் பேசும்போது தலையையும், மனதைப் பற்றிப் பேசும்போது நெஞ்சையும் தொட்டுக் காட்டிப் பேசுவது வழமை. மனம் மிக வலிமையானது. எனவே குறிப்பாக மனதைப் பற்றிய விடயங்களையே இன்று இப் பத்தியில் பகிரப்போகிறேன். மனதுக்கு என்று ஒரு உருவம் கிடையாது. மனம் பேசும். மனதால் பலவற்றைக் காணலாம். மனம் பேசுவதை நிறுத்தியதும் அது பார்வையை இழந்துவிடும். அதனுள்ளே தோன்றும் உருவங்களும் நின்றுவிடும். மனதை ஒரு மாயா விழி என்றும் சொல்லலாம்.

மனதைக் கவனிக்க முடியும் என்கின்றனர் ஞானிகள். மனதைக் கவனத்துக்குட்படுத்துவதன் மூலம் அதனை ஆளலாம் என்றும் சொல்லப்படுகிறது. மனதுக்குப் பல விந்தைகளை நிகழ்த்தக் கூடிய ஆற்றலுண்டு. மனத்தை உணர்வதன் மூலம் அதனுள் நிகழ்பவற்றை அனுபவிக்கலாம் என்கின்றனர் அறிஞர்கள். மனம் மூச்சோடு சம்பந்தப்பட்ட விடயம் என்றும் சொல்லப்படுகிறது. மனம் அதற்குரிய மொழியினாலேயே தன்னை இனம் காட்டுவதாகச் சொல்பவர்களும் உண்டு.

திருக்குறள்

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற”. (குறள் 34 - அறத்துப்பால், பாயிரவியல், அறன்வலியுறுத்தல்)

மனதை தூய்மையாக வைத்துக்கொள்வதே ஒருவரின் அறம். தூய்மையான மனமே உண்மையான ஆபரணம். மற்றவையெல்லாம் வெற்றுச் சத்தங்களே என்றுரைக்கிறார் திருவள்ளுவர்.

இந்தக் குறளிலே வள்ளுவர் அறத்தை மனதோடு இணைக்கிறார். உள்ளத்தில் குற்றம் இல்லாது இருத்தலே அறமாம். பிறவெல்லாம் ஆரவாரத்தின் தன்மையானவே. மேற்கோள்களாகக் காட்டப்படும் குறட்பாக்களில் இதுவே முதன்மை பெறுகிறது. அறம் என்றால் என்ன என்பதற்குப் பலரும் பலவிதமாக விளக்கம் கூறினர். ஆனால் வள்ளுவர் “உள்ளத்தின்கண் குற்றங்குறை இல்லாதவனாக ஒருவன் இருத்தல் என்பதே அறம்” என்கிறார். அவர் கூறும் அறத்திற்கான இலக்கணம் எளிமையானது புதுமையானது பொதுமையானது எல்லோராலும் செயல்படுத்தக் கூடியது எக்காலத்திற்கும் ஏற்றது. “பிற” அதாவது மற்ற மனத் தூய்மையற்ற, அறத்தின் பெயரிலான, சொல்லும் செயலும் ஆடம்பரமானவை; ஒலிஎழுப்புவதற்காகச் செய்யப்படுவன் வீண் பகட்டுக்காகவும் வெற்று விளம்பரத்திற்காகவும் செய்யப்படுவன எனவும் கூறினார். தூய்மையான மனம் இல்லாமல் மற்றவர் அறிவதற்காகவே செய்யும் செயல்கள் எல்லாம் ஆடம்பரம், ஆரவாரம், இரைச்சல் தன்மைகள் கொண்டவையாகும். அறம் உள்ளத்திலேயே தோன்ற வேண்டும். சொல்லிலும் செயலிலும் அறம் காணப்பட்டாலும் உள்ளமும் அதனோடு பொருந்த வேண்டும் என்பது வள்ளுவம் என்ற குறிப்பையும் இணையத்தில் கண்டேன்.

மூதறிஞர் என்றழைக்கப்படும் ஔவையும் இதே கருத்தை ஆத்திசூடியிலே முன்வைக்கிறார். அறம் செய விரும்பு என்ற வரிகளிலே அவர் அறத்தைச் செய்யும்படி வலியுறுத்தாது அறம் செய்ய விரும்புமாறு அறிவுறுத்துகிறார். ஒரு விடயம் நடைமுறையில் சாத்தியமாவதற்கு முதலில் மனம் அதனை விரும்ப வேண்டும். மனதால் ஒன்றை விரும்புவதற்குரிய வலிமையை அங்கே வலியுறுத்துவதன் மூலம் மனதின் வலிமையை அவர் உணர்த்துகிறார்.

மனம் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதற்கு ஒரு சின்ன உதாரணம் பின்வருமாறு.முகநூலில் பார்த்தது. படித்தது. பகிர்ந்து கொள்கிறேன்.

ஒரு பெண், லண்டன் நகரத்தில் வாழ்பவர். அங்குள்ள கால நிலைக்கு ரோஜா மலர்கள் நன்கு வளரும். அதனை எல்லோருக்கும் பிடிக்கும். ஆனால், இந்த பெண்ணிற்கு ரோஜா மலர்கள் ஒவ்வாமையை (அலர்ஜி) ஏற்படுத்திவிடும். . ஒரு ரோஜாப் பூ அருகிலிருந்தாலே, அவர் கண்களிலிருந்து கண்ணீர் வரும், தும்மல் வரும். மிகவும் கஷ்டப்படுவார். அதனால் அவர் ரோஜா மலர்களுக்கு அருகில் செல்வதைத் தவிர்த்துக் கொள்வார்.

இந்த சூழ்நிலையில் ஒருநாள், அவருடைய காரியாலயச் சந்திப்பொன்றில் அவர் கலந்து கொள்ள நேரிட்டது. அந்தச் சந்திப்பு நடைபெறவிருந்த அறைக்குள் நுழைந்தவுடன் அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. ஒரு பெரிய மேசையின் மேல் நூற்றுக்கணக்கான ரோஜா மலர்களை வைத்து அலங்கரித்திருந்தனர்.

“ஒரு பூ அருகில் இருந்தாலே எனக்கு ஒவ்வாமை ஏற்பட்டுவிடும். இவ்வளவு பூக்கள் மத்தியில் நான் எப்படி இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளப் போகிறேன்” என்று அவர் பயந்தார். ஆனால் வேறு வழியில்லாமல், அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சென்று அமர்ந்து கொண்டார். பூக்களைப் பார்த்ததுமே அவருக்கு கண்களில் இருந்து நீர் வரத் தொடங்கியது. தும்மலும் வந்தது, உடனே முகமெல்லாம் சிவந்து விட்டது.

சந்திப்பு ஆரம்பிக்கச் சற்று முன்னர் அவர் பின்னாலிருந்து ஒருவர் எழுந்து வெளியில் சென்றார். செல்கிறபோது அந்த ரோஜாக் கொத்தைப் பார்த்து “இந்த பூக்களைப் பாருங்கள். நிஜமான பூக்கள் போலல்லவா இருக்கின்றன..” என்று கூறிக்கொண்டே வெளியே சென்றார். அப்பொழுதுதான் அந்த அம்மையாருக்குத் தெரிந்தது, அந்த பூக்கள் உண்மையான பூக்கள் அல்ல. எல்லாமே காகிதத்தால் செய்யப்பட்ட செயற்கை மலர்கள் என்று.

உடனே அவர் யோசித்தார்.. “இந்தக் காகிதப் பூக்கள் எப்படி எனக்கு ஒவ்வாமையை ஏற்படுத்த முடியும்..?”அப்படி நினைத்த மறு வினாடியே அவருடைய ஒவ்வாமைக்குண்டான அறிகுறிகள் அனைத்துமே மறைந்து விட்டன.

இதுதான் - எமது மனம்.. இந்த மனதால் நோய்களை மட்டுமல்ல எதனையும் உருவாக்கவும் முடியும்.. குணப்படுத்தவும் முடியும்..

மனதால் பிரச்னையை உருவாக்கவும் முடியும்.. அதற்குத் தீர்வையும் தர முடியும் என்ற விடயம் நன்கு தெளிவாகிறது. எனவே, எண்ணங்களைச் சாதகமாக மட்டும் வைத்துக் கொண்டால் சாதனை படைக்கலாம்.

இப்படிக்கு - பிரதீப்.

ஈழநாடு



# சுசிலுக்கு நடந்தது எமக்கும் நடக்கலாம்

## எதற்கும் தயார் என்கிறார் மைத்திரி



**கொழும்பு, ஜன. 09**

**“சுசில் பிரேமஜயந்தவுக்கு இன்று நடந்தது, நாளை நமக்கும் நடக்கலாம். எதற்கும் தயாராகவே இருக்கின்றோம்.” - இவ்வாறு சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

குருணாகலையில் நடைபெற்ற கட்சி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

புதிய அரசொன்றை அமைப்பதற்கான வேலைத்திட்டத்தை நாம் முன்னெடுத்து வருகின்றோம். இராஜாங்க அமைச்சராக இருந்த சுசில் பிரேமஜயந்தவுக்கு 24 மணி நேரத்துக்குள் அதிஷ்டம் அடித்தது. நாளை எமக்கும் அது நடக்கலாம். எனவே, எதற்கும் தயாராகவே இருக்க வேண்டும்.

அரசை விமர்சிப்பதற்கு எனக்கு தகுதியில்லை எனவும், நீங்களும் ஜனாதிபதியாக இருந்தவர்தானே எனவும் சிலர் வலைத்தளங்களில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

எனது தலைமையில் அமைந்த ஆட்சியானது மாறுபட்டதொன்றாகும். இலங்கை அரசியல் வரலாற்றில் அவ்வாறானதொரு அரசு இன்னும் அமையவில்லை. ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. மனித உரிமைகள் மதிக்கப்பட்டன. தகவல் அறியும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டது. ஊழல்வாதிகள் தண்டிக்கப்பட்டனர். நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது.

அதேவேளை, 20 ஆவது திருத்தச்சட்டம் இல்லாதொழிக்கப்பட்டு 19 மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும். அப்போதுதான் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு கிட்டும்.” - என்றார். (அ)

# சுதந்திரதின அணிவகுப்பில் 6,783 படையினர் பங்கேற்பு!

கொழும்பு, ஜன. 10

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் உட்பட அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகள் இம்முறை சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளதுடன் அவர்களுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர்என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்தார்.

சுதந்திர தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் கொழும்பு மாவட்ட செயலக கட்டடத்திலுள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஜீ. தர்மதிலக உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டு சுதந்திர தின விழாவுக்கான ஏற்பாடுகளை தெளிவுபடுத்தினர்.

சுதந்திர தின விழாவையொட்டி சமய வழிபாடுகள் அன்றைய தினம் காலை 6.30 மணியளவில் நடைபெறவுள்ளன. பௌத்த மத நிகழ்வு நாரஹேன்பிட்டியிலுள்ள அபேயராம விஹாரையில் நடைபெறவுள்ளதுடன் முக்கிய அமைச்சர்கள் பலரும் அதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்து சமய மத நிகழ்வுகள் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளதுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் எம்.பி. ஆகியோரும் அந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். முஸ்லிம் சமய மத வழிபாடுகள் கொழும்பு 12 பெரிய பள்ளியில் நடைபெறவுள்ளதுடன் நீதியமைச்சர் அலிசப்ரி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள னர்.

கத்தோலிக்க சமய மத வழிபாடு புஞ்சிபொரளையிலுள்ள அனைத்து புனிதர்களின் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இராஜாங்க அமைச்சர்களான இந்திக்க அநுரத்த, திருமதி சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதில் கலந்துகொள்ளவுள்ளனர். கிறிஸ்தவ வழிபாட்டு நிகழ்வு கொழும்பு 02 இல் உள்ள இரட்சணிய சேனை ஆலயத்தில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை சுதந்திர தின நிகழ்வுகள் நாட்டில் நடைமுறையிலுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கமைய நடைபெறவுள்ளன. நிகழ்வு நடைபெறும் சுதந்திர சதுக்கத்தையொட்டிய பிரதேசங்கள் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்படுவதுடன் நிகழ்வில் பங்குபற்றுவோருக்கான பொது வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுதந்திர தின நிகழ்வுகளின் முக்கிய அம்சமான முப் படை வீரர்களின் அணிவகுப்பில் இம்முறை 6,783 வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் ஒத்திகை நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன் ஒத்திகை நேரம் தவிர்ந்த ஏனைய காலங்களில் பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் வீதிகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் தேசிய கீதம் இசைப்பதற்காக 45 பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். விசேட அதிதிகள் மற்றும் முக்கியஸ்தர்களுக்காக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் காலை 7.30 மணிக்கு முன்பதாக அனைவரும் ஆசனத்தில் அமரவேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்முறை சுதந்தர தின நிகழ்வுகளை பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் கடந்த வருடங்களைப் போன்று வீதியில் இரு மருங்குகளிலும் இருந்து நிகழ்வுகளை பார்வையிடுவதற்கு மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த இந்த விசேட பேச்சுவார்த்தையில் முப்படைகளின் பிரதானிகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை உயரதிகாரிகள், ஊடக நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள், சுதந்திர தின நிகழ்வுகளோடு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ‘பூஸ்டர் தடுப்பூசியும் கட்டாயமாக்கப்படும்’

கொழும்பு, ஜன. 09

பொது இடங்களுக்கு செல்வதற்கு பூஸ்டர் தடுப்பூசி கட்டாயமாக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கியூ.ஆர் (QR Code) கோட் உள்ளடங்கிய புதிய தடுப்பூசி அட்டையும் தடுப்பூசி செயலியும் விரைவில் அறிமுகம் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் தடுப்பூசி நிலையங்களாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டள்ளதாகவும், இதன் மூலம் தடுப்பூசி ஏற்றுகையை துரிதப்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார். இதுவரையில் நாட்டில் 28 வீதமானவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.(அ)

# விலைவாசி உயர்வினை ஏற்றுக்கொள்கிறது அரசு

## கூறுகிறார் மஹிந்தானந்த

கொழும்பு, ஜன. 09

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கணிசமான அளவு அதிகரித்திருப்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

எவ்வாறாயினும், கடந்த ஆண்டு அரசாங்கத்தின் கவனம் கோவிட் -19 தொற்று நோயிலிருந்து மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பதில் இருந்தது.

பொதுமக்களின் உயிர் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

நாவலப்பிட்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பால்மா, எரிவாயு, சீனி, பருப்பு மற்றும் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. 20 மாத காலப்பகுதியில் அரசாங்கம் கொரோனா தொற்றுக்கு எதிராக போராட வேண்டியிருந்தது.

வைரஸிலிருந்து உயிர்களைக் காப்பாற்றுவதில் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால், படிப்படியாக வருமானம் அதிகரித்து வருகிறது. ஏப்ரல் அல்லது மே மாதத்துக்குள் நிலவும் நிலைமை குறையும்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பல தனிநபர்கள் அரசாங்கத்தை வசைபாடி வருகின்றனர்,

எவ்வாறாயினும், நிலவும் அனைத்து பிரச்னைகளுக்கும் அரசாங்கம் தீர்வு காணும்-என்றார். (அ)

# தீர்க்கமுடியாத நெருக்கடியை உருவாக்கியுள்ளது இந்த அரசு

## நீதிக்கான பெண்கள் அமைப்பு கூறுகிறது

கொழும்பு, ஜன. 09

அரசாங்கம் தீர்க்க முடியாத ஒரு பாரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளதாக நீதிக்கான பெண்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் தன்னிச்சையான நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படவேண்டும் எனவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

அத்தியாவசிய பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு மற்றும் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ள நிலையில் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையால் பாரிய நெருக்கடி நிலை உருவாகியுள்ளதாக மேல்மாகாண சபை முன் னாள் உறுப்பினரான நிரோஷா அத்துக்கோரள தெரிவித்தார்.

அரிசி விலை ஏழு மடங்கு அதிகரித்துள்ள நிலையில், கடைக்குக் கடை பொருட்களின் விலைகள் மாறுபடும் என அத்துக்கோரள கூறினார்.

அதிகரித்த வாழ்க்கைச் செலவால் குழந்தைகளுக்கு சத்தான உணவை பெற்றோர்களால் வழங்க முடியவில்லை.

சதொச விற்பனை நிலையங்களில் அரிசி 100 ரூபாவுக்கு கிடைக்கும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தபோதிலும், சதொச விற்பனை நிலையங்களில் இறாக்கைகள் பொருட்கள் கிடைக்காமல் வெற்றிடமாக உள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# திருமலை எண்ணெய் குத ஒப்பந்தம் 18 ஆம் திகதி சபையில் முன்வைப்பு

கொழும்பு, ஜன. 10

திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் கைச்சாத்திடப்பட்டுள்ள புதிய உடன்படிக்கை எதிர்வரும் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அதற்கு முன்னர் நாளை திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்திலும் ஒப்பந்தம் முன்வைக்கப்படவுள்ளது.

திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. தொழிற்சங்கங்கள் போராட்டத்துக்கு தயாராகிவருகின்றன.

அதேபோல இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானத்தை இரத்துசெய்யக்கோரி உயர்நீதிமன்றத்திலும் அடிப்படை உரிமை மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டது. (அ)

# பொருள்களின் விலையை குறைக்க நிச்சயம் நடவடிக்கை எடுப்போம்

## பிரதமர் மஹிந்த உறுதி



கொழும்பு, ஜன. 09

**அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை தொடர்ந்து செயற்படுத்தும். முழு உலகையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ள கோவிட் - 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் அனைத்து சவால்களையும் சமாளிக்க நேரிட்டுள்ளது.**

அரசாங்கம் ரீதியில் சிறந்த முறையில் முன்னேறி செல்வோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சவால்களுக்கு மத்தியில் நிச்சயம் நிறைவேற்றுவோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாவதகம நிர்மாணிக்கப்பட்ட நீர்விநியோக செயல் திட்டத்தை மக்கள் பாவனைக்கு வழங்கும் நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

மாவதகம பகுதியில் வாழும் மக்கள் நீரின் அருமையினை நன்கு அறிவார்கள். இந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தை முன்னதாகவே மக்களிடம் கையளித்திருக்கவேண்டும். ஏனெனில் அந்தளவுக்கு இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்க்கொண்டுள்ளனர்.

ஆரம்ப காலத்தில் ஆறு, குளம் ஆகியவற்றின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட சுத்தமான குடிதண்ணீரை தற்போது பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. மனித செயற்பாடுகளின் காரணமாக இயற்கையாக கிடைக்கக் கூடிய நீர் வளங்கள் மாசடைந்துள்ளன. மனித செயற்பாடுகள் மனித குலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தின. இதன் விளைவு எதிர்கால தலைமுறையினருக்கும் செல்வாக்கு செலுத்தும்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் செயற்திட்டம் 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூரணமடையும். சுத்தமான குடிதண்ணீர் செயற்திட்டம் குருநாகல், ரிதிகம, இப்பாகமுவ, கனேவத்த, மெல்சிறிபுர மற்றும் மெஸ்பொத ஆகிய பிரதேச பிரிவுகள் ஊடாக முன்னெடுத்து செல்லப்படும்.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது அரசால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி செயல் திட்டப் பணிகளை நல்லாட்சி அரசாங்கம் இடைநிறுத்தியது. அதன் தாக்கத்தை நாட்டு மக்கள் எதிர்க்கொண்டார்கள். அரசியல் நோக்குக்காக செய்த தவறை தற்போது திருத்திக் கொண்டுள்ளோம்.

மக்களுக்கு நிவாரணம் வழங்கும்போது தேர்தல் ஏதும் இடம்பெறவுள்ளதா என ஒரு தரப்பினர் வினவுகிறார்கள். தேர்தலை இலக்காக கொண்டு மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவில்லை. சுத்தமான குடிதண்ணீரை பெற்றுக் கொள்ளும் இந்த மக்கள் எந்த கட்சிக்கு ஆதரவு வழங்கினார்கள் என்பதை நாம் ஆராயவில்லை.

மக்கள் எதிர்க்கொண்டுள்ள சிரமங்களை அரசாங்கத்தினால் நன்கு உணர முடிகிறது. அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதனால் தான் மக்களுக்கு நிவாரணம் வழங்க தீர்மானித்துள்ளோம்.

அரசாங்கம் முன்னெடுத்த சிறந்த நடவடிக்கைகளினால் கோவிட் தாக்கத்திலிருந்து நாட்டு மக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள் என்பது தொடர்பில் எதிர்தரப்பினர் கருத்துரைப்பதில்லை. அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைப்பதற்கும், விலையேற்றத்தை கட்டுப்படுத்தவும் அரசாங்கம் என்ற ரீதியில் உரிய நடவடிக்கையை முன்னெடுப்போம். முழு உலகிற்கும் தாக்கம் செலுத்தியுள்ள கோவிட் -19 வைரஸ் நிலைமையில் இருந்துக் கொண்டு அனைத்து சவால்களையும் சமாளிக்க வேண்டும்.

அரசாங்கம் என்ற ரீதியில் அனைத்து சவால்களையும் வெற்றிக் கொண்டு சிறந்த முறையில் முன்னோக்கி செல்வோம் - என்றார்.

(அ)



# நாட்டு வளங்களை அரசு விற்பனை செய்கின்றது

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 09

" நாட்டு வளங்களைப் பாதுகாப்போம் என மார்தட்டி ஆட்சிக்கு வந்த இந்த அரசு, தற்போது நாட்டு வளங்களை விற்பனை செய்துவருகின்றது."

- என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று குற்றஞ்சாட்டினார்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பான ஒப்பந்தம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

"நாட்டு வளங்கள் விற்பனை செய்யப்படமாட்டாது, விற்பனை செய்யப்பட்டுள்ள வளங்கள்கூட மீளப்பெறப்படும் என ஆட்சியாளர்கள் சூளுரைத்தனர். தற்போது அந்த வாக்குறுதி மீறப்பட்டுள்ளது. தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. எமது வருங்கால சந்ததியினருக்கு ஒரு அங்குலமேனும் மிகுதி இருக்குமா என தெரியவில்லை." - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். (அ)

# மன்னாரிலிருந்து கொழும்பு சென்ற ரயிலில் இருந்த பொதிக்குள் 'ஐஸ்'!



மன்னார், ஜன. 09

தலைமன்னார் ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்று சனிக்கிழமை காலை பயணித்த ரயிலில் உரிமை கோரப்படாத பயணப் பொதி ஒன்றில் இருந்து இராணுவத்தினரால் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

உரிமை கோராத குறித்த பயணப் பொதியில் இருந்து சுமார் 360 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

தலைமன்னாரில் இருந்து நேற்றுக் காலை கொழும்பு நோக்கி பயணித்த ரயில் தோட்டவெளி ரயில் நிலையத்தை சென்றடைந்தது.

இதன்போது அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினர் குறித்த ரயிலில் ஏறியுள்ளனர்.

இதன்போது குறித்த ரயிலில் உரிமை கோரப்படாத பயணப் பொதி ஒன்று காணப்பட்டது.

குறித்த பயணப் பொதிக்கு எவரும் உரிமை கோராத நிலையில் சௌத்பார் இராணுவத்தினர் அந்தப் பயண பொதியை சோதனை செய்தனர்.

இதன்போது குறித்த பயணப் பொதியில் இருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட ஐஸ் போதைப் பொருள் 360 கிராம் எடை கொண்டது என தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணை மற்றும் நடவடிக்கைகளுக்காக சௌத்பார் இராணுவத்தினரால் குறித்த ஐஸ் போதைப்பொருள் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விஸா இன்றி இருந்த வெளிநாட்டவர் இருவர் கைது!

கொழும்பு, ஜன. 09

விஸா இன்றி இலங்கையில் இருந்த வெளிநாட்டவர்கள் இருவர் கைது செய்யப்பட்டு 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை தெற்கு பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்து களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவர்கள் களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

21 மற்றும் 23 வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (அ)

# பாடசாலை தடுப்பூசி மையங்களில் ஏனையவர்களும் பூஸ்டர் பெறலாம்

கொழும்பு, ஜன. 09

12 வயது முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கு தடுப்பூசியை வழங்குவதற்காக பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பூசி மையங்களில் ஏனையவர்களும் பூஸ்டர் டோஸ் வழங்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பெற்றோர்கள், பாடசாலை வான் சாரதிகள் மற்றும் ஏனையவர்களும் பாடசாலை தடுப்பூசி நிலையங்களுக்கு சென்று பூஸ்டர் டோஸை பெற்றுக் கொள்ள முடியும் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் ரஞ்சித் படுவன்துடாவ தெரிவித்தார்.

தொற்று நோயியல் பிரிவு அனைத்து தடுப்பூசி நிலையங்களுக்கும் உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

# இலங்கைச் சிறைச்சாலைகளில் வாடும் தமிழ்நாட்டு மீனவர்களை விடுவியுங்கள்

## மு.க.ஸ்டாலின் மத்திய அரசிடம் கோரிக்கை

சென்னை, ஜன 09

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், இலங்கைச் சிறைகளிலிருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொண்டமைக்காக மத்திய அரசுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன், கடந்த 2021 டிசெம்பர் 19 மற்றும் 20 ஆம் திகதியிலிருந்து இலங்கை சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் 56 மீனவர்களை விடுவித்து, பாதுகாப்பாக இந்தியாவுக்கு அழைத்துவர தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மேலும், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான, அவர்களின் வாழ்வாதாரத்துக்கு இன்றியமையாத 75 மீன்பிடிப் படகுகளையும் மீட்டெடுக்குமாறும் முதல்வர் கோரியுள்ளார்.

வரவிருக்கும் பொங்கல் திருநாளை முன்னிட்டு, இலங்கை சிறைகளில் வாடும் 56 மீனவர்களை விடுவித்து, அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் மீண்டும் இணைவதை உறுதி செய்திடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்குரிய உயர்நிலைப் பேச்சுவார்த்தைகளை இலங்கை அரசாங்கத்துடன் நடத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

ஈழநாடு



# உலக ஒழுங்கின் மாற்றமும் ஈழத் தமிழர் அரசியலும்!

பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்



இலங்கை அரசியல் பரப்பில் ஈழத்தமிழர்களின் இருப்பு நீடித்த நெருக்கடிக்குள் அகப்பட்டுள்ளது. 2009களுக்கு பின்னர் அவ்வகை நெருக்கடி மிகத்தீவிரமாக அதிகரித்திருப்பதோடு தீர்வை நோக்கிய அவசியப்பாட்டை ஊடகவியலாளர்களும் கருத்தியல்வாதிகளும் உரையாடி வருகின்றனர். ஈழத்தமிழரின் பிரச்னைக்கான தீர்வொன்றை எட்டுவதற்கு உள்நாட்டின் எல்லைக்குள் சாத்தியமற்றதென்ற முடிவை அத்தரப்பு மட்டுமல்ல அரசியல் தரப்புக்களும் ஈழத்தமிழர்களும் உணர்ந்துள்ளனர். அதனால், பிராந்திய மட்டத்திலும் பூகோள மட்டத்திலும் நிகழ்ந்துவரும் மாற்றங்களை பயன்படுத்திக் கொள்ள முடியுமென கருத்தியல்வாதிகள் குறிப்பிடுகின்றனர். அதற்கான சூழல் 2020களுக்கு பின்னர் மேலும் அதிகரித்திருக்கின்றது என்பதுவே அக்கருத்தியல்வாதிகளின் அறிவுத்தேடலின் வெளிப்பாடாக உள்ளது. இந்தக் கட்டுரையும் அவ்வாறு கருத்தியல்வாதிகளால் முன்னிறுத்தப்படும் வாய்ப்பான சூழலை மேலும் தெளிவுபடுத்தும் விதத்தில் வெளிக்கொண்டு வருகிறது.

உலக ஒழுங்கின் மாற்றம் 2009களுக்கு பின்னர் ஈழத்தமிழர்களின் அரசியலோடு அதிக ஈடுபாட்டை கொண்டதாக அல்லது தொடர்பு கொண்டதாக உணரப்படுகிறது. இந்து சமுத்திரத்தையும் பசுபிக் சமுத்திரத்தையும் இணைக்கும் உபாயத்தை வகுத்த அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் இந்தியாவை அரவணைத்துக் கொண்டு தென்னாசிய பிராந்தியத்தின் ஆழமான அரசியலில் பொருளாதார இராணுவ மற்றும் இராஜீக முயற்சிகளை ஏற்படுத்தி வருகிறது. பசுபிக் சமுத்திர நாடுகளும் இந்து சமுத்திர நாடுகளும் அதீதமான அரசியல் இணைப்பாட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இப்பிராந்திய நாடுகளில் பொருளாதார விருத்தி, உட்கட்டமைப்பு வளர்ச்சி, தேசிய இனங்கள் தொடர்பான பிரச்னைகளுக்கான தீர்வுகள் என்ற அடிப்படையில் அத்தகைய நகர்வுகளை மேற்கு ஏகாதித்திய நாடுகள் மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய நகர்வுகளுக்கு பின்னால் கிழக்கு ஏகாதிபத்திய சக்திகளான சீனாவினதும் ரஷ்யாவினதும் நடவடிக்கைக்கான பதிலீட்டையே மேற்கு நாடுகள் ஏற்படுத்த முயலுகின்றன. குறிப்பாக, சீனாவை அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளுக்கு பிரதான சக்தியாகவும் நெருக்கடி கொடுக்கும் நாடாகவும் கருதுகின்றது. இதனால் சீனாவுடனான உறவை கொண்டிருக்கும் நாடுகளை நோக்கி அதீதமான இராஜீக நகர்வுகளும் கையாளுகைகளும் மேற்கு நாடுகளால் முன்னகர்த்தப்படுகின்றன. இதுவே ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்குரிய வாய்ப்பாக கருதப்படுகிறது. இலங்கைத்தீவில் சீனாவின் அதீத பிரசன்னத்தை அங்கீகரிக்கும் ஊக்குவிக்கும் தென்னிலங்கை அரசு அரசியல், பொருளாதார, உட்கட்டமைப்பு விடயங்களை கையாள்வதோடு இராஜீக முயற்சிகளை மேற்கு நாடுகள் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளார்கள். அத்தகைய மேற்கு நாடுகளின் அணிக்குள் இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவே முதன்மையான நாடாக உள்ளது. எனவே, இந்தியாவை கையாளுதல் என்பதுவும் இந்தியாவை அரவணைத்தல் என்பதுவும் தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்கக்கூடியதொன்றாகும். இதனாலேயே ஈழத்தமிழரின் அரசியல் தலைமை மற்றும் சிவில் அமைப்புக்கள் இத்தகைய காலப்பகுதியை பயன்படுத்தி கொள்ளுதல் அவசியமென கருத்தியல் தளத்தில் இயங்குபவர்கள் முதன்மைப்படுத்துகின்றார்கள். இதனை ஆழமாக நோக்குதல் அவசியமாகும்.

முதலாவது, சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்தபோது கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத் குடியரசுகளிலும், ஆசிய குடியரசுகளிலும் கிடைத்த வாய்ப்பு தற்போது இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு கிடைத்துள்ளது. சோவியத் யூனியனின் சோசலிச வீழ்ச்சிக்கு பின்னர் தேசிய இனப்பிரச்னைகளுக்கான தீர்வுகள் மேற்குலக ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்குள்ளாலேயே கையாளப்படுகிறது. மேற்கின் ஏகாதிபத்திய விருப்புகளுக்கு உட்பட்டே தேசிய இனங்களுக்கான சமஷ்டி தீர்வும், அகநிர்ணய - சுயநிர்ணய தீர்வும், பொதுவாக்கெடுப்பு தீர்வும் சாத்தியப்படுத்தப்படுகிறது. அத்தகைய சூழல் ஒன்றுக்குள் ஈழத்தமிழர் தமது தீர்வை நோக்கிய நகர்வுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. அதனை கட்டமைப்பதும், நகர்த்துவதும், வெற்றி கொள்வதும் ஈழத்தமிழ் அரசியல் தலைமைகளுக்கும், சிவில் தரப்புக்கும், புலம்பெயர்தரப்புக்கும் உரியதாகும். இதனாலேயே இக்காலப்பகுதியை அதிகம் முதன்மைப்படுத்த வேண்டிய சூழலுக்குள் கருத்தியல்வாதம் காணப்படுகிறது.

இரண்டாவது, சமஷ்டி தீர்வு என்பது பல நூற்றாண்டுகளாக முரண்பாடுடைய தேசியங்களுக்குள் கையாளப்படும் ஓர் அதிகார கட்டமைப்பாகக் காணப்படுகிறது. அத்தகைய கட்டமைப்பை ஈழத்தமிழர்களும் ஈழத்து சிங்களவர்களும் மிக நீண்டகாலமாக உரையாடி வருகின்றனர். ஒரே நாட்டுக்குள் ஒரு தீர்வை எட்ட வேண்டுமாயின் அது ஓர் ஆரோக்கியமானதாக கட்டமைக்கப்பட வேண்டியதாயின் கூட்டு சமஷ்டியோ, சமஷ்டியோ பொருத்தமானது என்ற வாதம் கருத்தியல் தளத்தில் முன்னிறுத்தப்படுகிறது. அத்தகைய இணக்கப்பாட்டுக்குள் பயணம் செய்வதற்கான முயற்சியை ஈழத்தமிழர்கள் முயன்றுள்ளார்கள். சமகாலத்திலும் அதன் அவசியப்பாட்டை வலியுறுத்தி வருகின்றார்கள். ஆனால், அதற்கான அரசியல் கூட்டுத்தன்மையோ அல்லது ஒருமைப்பாடோ ஈழத்தமிழர் அரசியல் சக்தி களிடம் ஏற்படவில்லை. ஆனாலும், அதனை நோக்கி இந்தியாவையும் மேற்கையும் அரவணைப்பது மூலம் அடைவதற்கான வாய்ப்பு அதீதமாக உள்ளது.

மூன்றாவது, மேற்கு ஏகாதிபத்தியத்தின் தீர்வு சார்ந்த இன்னோர் அம்சமாக பொது வாக்கெடுப்பு காணப்படுகிறது. அதனையும் தனது விருப்புக்கு உட்பட்ட விதத்தில் கட்டமைப்பதிலேயே கரிசனை கொண்டு செயல்படுகிறது. மேற்கின் பொருளாதார, இராணுவ, அரசியல் மேலாதிக்க நலன்களுக்கு ஏற்ப அத்தகைய பொதுவாக்கெடுப்புக்கான முடிவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. அதன் வரிசையில் மிகப் பிந்திய அனுபவம் ஈராக் - குர்திஷ், ஸ்கொட்லாந்து - நியூகலிடோனியா மற்றும் கடலேனியா போன்ற பிரதேசங்களில் தேசிய இனப்பிரச்னை தொடர்பான தீர்வுகளுக்காக முன்மொழியப்பட்டிருந்தது. ஆனால், கடலோனியா மக்கள் சுயாட்சிக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டும் மேற்கின் நலன் களுக்கு வாய்ப்பான சூழலை கொடுக்காதபோது பொதுவாக்கெடுப்பு அங்கீகரிக்கப்படாத நிலைமை காணப்படுகின்றது. எனினும், பொதுவாக்கெடுப்பு சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னர் அங்கீகாரமிக்கதோர் இனப்பிரச்னைக்கான தீர்வு சார்ந்த விடயமாகக் காணப்படுகிறது.

நான்காவது, இத்தகைய முன்மொழியப்பட்ட தீர்வுகளுக்கு பின்னால் மேற்குலகின் நலன்கள் இணைக்கப்படுகின்றபோது சாத்தியமான விளைவுகளை நெருக்கடிக்கு உள்ளாகும் தேசிய இனங்கள் அனுபவித்து வருகின்றன. இதனை முன்னிறுத்தியும் நாடுகளை இலக்கு வைத்தும் இந்தோ - பசுபிக் உபாயத்தின் விஸ்தரிப்பு நிகழ ஆரம்பித்துள்ளது. அத்தகைய நிகழ்வின் பிரதான தெரிவிற்குரிய தேசிய இனமாக ஈழத்தமிழர்கள் இந்தியாவாலும், அமெரிக்காவாலும், ஐரோப்பிய நாடுகளாலும் அவதானிக்கப்படுகிறது. அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள புலம்பெயர் ஈழத்தமிழர்கள் இத்தகைய அவதானிப்புக்கு பிரதான பங்காளிகளாக உள்ளனர். இதில் இந்திய நலன்களும், மேற்கு நலன்களும் இந்து சமுத்திரத்தை நோக்கி சீன எதிர்ப்புவாதத்தால் கட்டமைக்கப்பட்டு வருகிறது. அத்தகைய கட்டமைப்பு மேற்கு ஏகாதிபத்திய நலனுக்கு உட்பட்டதாகவே அமைந்துள்ளது. அதன் பொருளாதார, சந்தை, வர்த்தக, இராணுவ நலன்களுக்கு உள்ளாலேயே முன்னெடுக்கப்பட வேண்டிய அரசியலாக உள்ளது.

ஐந்தாவது, இத்தளத்தில் சீனா நோக்கிய ஈழத்தமிழர்களுடைய பார்வை அரசு என்ற அடிப்படையிலும், கீழைத்தேய ஏகாதிபத்தியம் என்ற அடிப்படையில் அணுகப்படுவதும் கையாளப்படுவதும் அவசியமாகும். மேற்கின் ஏகாதிபத்தியம் போலி வடிவத்திலேனும் ஜனநாயத்தையும், மனித உரிமைகளையும், சுயநிர்ணயத்தையும், தேசிய விடுதலையையும் உரையாடுகின்றபோதும் சீனாவோ இன்றும் 16ஆம் நூற்றாண்டு அரச இறைமைக்குட்பட்ட ஏகாதிபத்தியமாகவே காணப்படுகிறது. உள்நாட்டு விவகாரங்களில் தலையிடா கொள்கையும், ஜனநாயகம், மனித உரிமைகள், சுயநிர்ணயத்தை அங்கீகரிக்காத சீனாவின் அரச இறைமை இராணுவ ஆட்சிகளையும், சர்வதிகார அரசுகளையும் கட்டியெழுப்ப உதவுமேயன்றி தேசிய இனங்களின் பாதுகாப்பை ஒருபோதும் உத்தரவாதப்படுத்தாது.

எனவே, 2019ஐ விட 2020 ஓர் ஆரோக்கியமான களத்தை தந்தது போல் 2020ஐ விட 2021 ஈழத்தமிழரின் தேசிய நலனில் ஆரோக்கியமான காலமாகவே தெரிகிறது. அதனை கையாளுவதும் வென்றெடுப்பதுவும் ஈழத்தமிழ் அரசியல் மற்றும் சிவில் தரப்பிடமே தங்கியுள்ளது. உலக ஒழுங்கின் மாற்றம் இதற்கான செய்தியை ஈழத்தமிழர்களுக்கு வழங்கி உள்ளது. - **நன்றி - அருவி**



# அவுஸ்திரேலியாவை அச்சுறுத்தும் ஓமைக்ரோன்




நியூசிலாந்து சிற்சபேசன்

கொரோனாத்தொற்று விரைவிலே பழங்கதையாகிவிடுமென அவுஸ்திரேலியர்கள் எதிர்பார்த்தார்கள். அதற்கான திறவுகோலே தடுப்பூசியென நம்பினார்கள். தடுப்பூசி ஏற்றிக்கொண்ட பின்னர் எதுவும் செய்யலாம். எங்கும் செல்லலாம் என நினைத்தார்கள். பொதுமக்களுடைய நம்பிக்கைகளை ஊக்குவிக்கும் வகையிலேயே அரசும் செயற்பட்டது. பொதுமுடக்கம் இல்லை. சர்வதேசப் பயணங்களுக்கான கட்டுப்பாடுகள் இல்லை. தடுப்பூசி ஏற்றிக்கொண்டு, பிசிஆர் பரிசோதனைச் சான்றிதழுடன் எங்கும் போகலாம் என்னும் தோற்றப்பாடு ஏற்பட்டது. கட்டுப்பாடுகளினால் திணறிக்கொண்டிருந்த அவுஸ்திரேலியர்கள் சடுதியாகப் பயணங்களை ஆரம்பித்தனர். அவ்வாறான பயணங்களுக்குத் தேவையான சான்றிதழைப் பெறுவதற்காக, பிசிஆர் பரிசோதனைக் கியூவரிசைகளில் குவிந்தனர். இவ்வாறாக அவுஸ்திரேலியர் விடுமுறைக்கனவுகளுடன் அலைந்துகொண்டிருந்த வேளையிலே ஓமைக்ரோன் தொற்று கங்காரு தேசத்தில் நுழைந்துவிட்டது.

கோடைவிடுமுறைக்காலத்தில் ஓமைக்ரோன் பரவல் அதிகரிக்கலாமென வல்லுனர்கள் அச்சம் வெளியிட்டனர். குறைந்த அளவுகளிலேயேனும் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தவேண்டும் எனச் சொல்லப்பட்டது. அவ்வாறு செய்யாதபட்சத்தில், தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் என்னும் குரல் யாருக்குமே கேட்கவில்லை. அது உச்சிவெய்யிலில் வெண்ணை விற்ற கதையாகியது. அந்தக்காலப்பகுதியிலேயே கோடைவிடுமுறைக் கனவுகள் உச்சம் தொட்டிருந்தன. ஏற்கெனவே, கொரோனாக் கட்டுப்பாடுகளினால் பொதுமக்கள் அதிருப்தியடைந்திருந்தனர். அதனைப் பூதாகரமாக்க அரசு தயங்கியது. அதுவே, குளிரிலிருந்து தப்புவதற்கு கொதி எண்ணையில் குதித்த கதையாகிவிட்டது.

தொற்றாளர்களின் எண்ணிக்கை இதுவரையில் ஏற்பட்டிராத அளவுகளைத் தொடுகின்றது. ஐந்தில் ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனச் சொல்லப்படுகின்றது. தேசத்தின் கிழக்குக் கரையே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றது.

தொற்றுப்பரவல் கையை மீறியபோது, பொதுமக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்கான யுக்திகளையே அரசு தேடியது. தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது விசனத்துக்குரியதல்ல என்று சொல்லியது. மாறாக, மருத்துவமனைச் சிகிச்சை தேவைப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதே விசனத்துக்குரியது என வியாக்கியானம் செய்தது. அதிலே, தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களைத் தொற்று அதிகம் பாதிக்காது என்னும் தொனியே தெரிந்தது. அதனை உறுதிப்படுத்துகின்ற வகையிலேயே தரவுகளை வெளியிட்டது. தடுப்பூசியை ஏற்றிக்கொண்டவர்கள் அல்லது ஏற்றிக்கொள்ளாதவர்களெனப் பகுப்புகளை வெளிப்படுத் தியது. அவற்றிலே, மருத்துவமனைச் சிகிச்சை தேவைப்படுகின்றவர்க ளிலே, தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்களே அதிகம் என்னும் தொனி தூக்கலாகவே வெளிப்பட்டது.

ஆனால், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பைத் தொடர்ந்து, மருத்துவமனைச் சிகிச்சை தேவைப்படுகின்றவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க ஆரம்பித்தது. அப்போது அரசுக்கு ஏற்பட்ட சங்கடம், ஆப்பிழுத்த குரங்கின் கதையை நினைவுபடுத்தியது.

ஒவ்வொரு சூழ்நிலைகளிலும், புதிய வியாக்கியானங்களை தேடுவதிலேயே அரசு கூர்மையான கவனத்தைச் செலவிடுகின்றது. மருத்துவமனைச் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை ஏற்றுக்கொள்ளத் துணியவில்லை. மாறாக, எண்ணிக்கையைக் கணக்கெடுக்கின்றமுறை தொடர்பிலே சுவாரஸ்யமான வியாக்கியானமொன்றைச் சொல்லியது.

மருத்துவமனைக்கு வேறு நோய்காரணமாக அனுமதிக்கப்படுவோர், அதன்பின்னர் கொவிட் தொற்றுக்கும் உள்ளாகின்றனராம். கொவிட் தொற்றினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற, தற்போதைய கணக்கெடுப்புமுறையிலே அவர்களும் சேர்க்கப்படுகின்றனராம். அது தவறானதென்னும் தொனி அரசின் வியாக்கியானங்களில் உரத்து ஒலித்தது. அது புதையல்தோண்ட பாம்புவந்த கதையாகிவிட்டது. மருத்துவமனை களிலே தொற்றுப்பரவல் ஏற்படுவதான புதிய தகவலைப் பகிரங்கப்படுத்திவிட்டது.



தொற்றாளர்களை அடையாளம் காண்கின்ற பரிசோதனை வளங்களில் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பணிச்சுமையினால் ஆளணிவளம் பாதிப் படைகின்றது. அதற்குத் தொற்றாளர் களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள திடீர் அதிகரிப்பும் ஒரு காரணமாகும். அதேவேளையில், கோடைவிடுமுறைப் பயணங்களுக்கான சான்றிதழ் பெறுவோரின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, அத்தியாவசியமான பரிசோதனைகளைப் பாதித்தமையையும் மறுப்ப தற்கில்லை. மறுவளத்தில், தொற்றுப் பாதிப்பினால் அவசரசிகிச்சைக்கு அம்பு லன்சை அழைப்பவர்கள் நெடுநேரம் காத் திருக்கவேண்டியிருக்கின்றது.

> **ஒவ்வொரு சூழ்நிலைகளிலும், புதிய வியாக்கியானங்களை தேடுவதிலேயே அரசு கூர்மையான கவனத்தைச் செலவிடுகின்றது. மருத்துவமனைச் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை ஏற்றுக்கொள்ளத் துணியவில்லை. மாறாக, எண்ணிக்கையைக் கணக்கெடுக்கின்றமுறை தொடர்பிலே சுவாரஸ்யமான வியாக்கியானமொன்றைச் சொல்லியது.**

அம்புலன் ஸ்சேவையைத் தொடர்புகொள்வதே குதிரைக்கொம்பாகின்றது. சாதரணமாக, ஒருசிலநிமிடங் களிலே அம்புலன்ஸ்சேவை கிடைத்துவிடுகின்றது. அதற்கு தற்போது ஒருமணித்தியாலம் வரையில்கூடக் காத்திருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

தொற்று ஏற்பட்டதனால் சிகிச்சை தேவைப்படுவோரின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரிக்கின்றது. அதனால் மருத்துமனைகள் திணறுகின்றன. அவசர சிகிச்சைப்பிரிவில் சேவையைப்பெறுவதற்கான காத்திருப்புநேரம் அதிகரிக்கின்றது. உள்நோயாளர் பிரிவில் படுக்கைப் பயன்பாட்டின் அளவு உச்சவரம்பைத் தொடுகின்றது. கூடவே, தொற்று ஏற்பட்டதனாலோ அல்லது தொற்றாளரின் அண்மிதம் ஏற்பட்டதனாலோ பல மருத்துவப்பணியாளர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுகின்றனர். அதனாலும், மருத்துவ ஆளணிவளம் பாரிய அழுத்தங்கட்கு உட்படுகின்றது.

சமூகப்பரவல் அதிகரிப்பதனால் தொழில்வளம் பாதிக்கப்படுகின்றது. ஆளணிப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. தொழில்சாலைகள், உணவுஉற்பத்தி, பொதுப் போக்குவரத்து, துறைமுகம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, மின்சாரசேவை, நீர்விநியோகம், உணவுப்பொருள் விநியோகம், பல்பொருள் அங்காடி (சூப்பர்மார்கட்) எனச் சங்கிலித்தொடரான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

ஆக, தொற்றுப்பரவல் அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்களின் விசாலம் அதிகரிக்கின்றது. இத்தகைய தொருநிலை, அவுஸ்திரேலியா போன்றதொரு தேசத்தில் எப்படி ஏற்பட்டது என்னும் கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இரண்டு ஆண்டுகட்கு முன்னர், கொரோனாத்தொற்று ஆரம்பமாகியபோது, இறுக்கமான பொதுச்சுகாதாரக் கட்டுப்பாடுகளை அவுஸ்திரேலியா ஏற்படுத்தியிருந்தது. அதன்மூலமாக, சமூகப்பரவலைக் கட்டுப்படுத்திய பெருமை அவுஸ்திரேலியாவுக்கு உண்டு. அன்றைய சந்தர்ப்பத்திலே பொதுமக்கள் கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொண்டிருந்தனர். காலப்போக்கில் நிலைமை மாறியது. கட்டுப்பாடுகளுக்கு எதிரான ஆர்பாட்டங்கள் கலகங்களாகின. பொதுசன அபிப்பிராயம் மாற்றமடைந்தது.

மேற்கத்திய ஆட்சியாளர்கள் பொதுசன அபிப்பிராயத்தைக் கூர்ந்து கவனிப்பவர்கள். இல்லாவிடில், வாக்குச்சாவடிகளில் விளைவுகளைச் சந்திக்கநேரிடலாம் என்னும் அச்சமே அதற்குக் காரணமாகும்.

பொதுமுடக்கம் போன்ற கட்டுப்பாடுகளை மக்கள் ஏற்கமாட்டர்கள் என்பதை அரசு உணர்ந்துகொண்டது. அதனாலேயே தொற்றுப்பரவல் தொடர்பில் மென்போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தது. அதனுடைய பிரதிபலிப்பையே ஒட்டுமொத்த காங்காருதேசமும் தற்போது எதிர்கொள்கின்றது.



குரு அரவிந்தன்

# தைப்பொங்கல் தமிழர்களின் திருநாள்

தைப்பொங்கல் தமிழர் திருநாளாகும். உழவர் திருநாள் என்றும் இதை அழைப்பர். ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்று பொதுவாகப் பெரியோர் சொல்வார்கள். ஆங்கில நாட்காட்டியின் படி தைமாதம் 14 ஆம் திகதி அல்லது 15 ஆம் திகதியில் தைப்பொங்கல் வரும். அதுவே தமிழ் நாட்காட்டியில் தைமாதம் முதலாம் திகதியாகும்.

இந்தியா, இலங்கை, கனடா, சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா, மொரிசஸ் மற்றும் தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்களால் தைப்பொங்கல் திருநாள் கொண்டாடப் படுகின்றது. ஆதிகாலத்தில் விவசாயமே தமிழர்களின் முதன்மைத் தொழிலாக இருந்தது. தமிழர்கள் விவசாயிகளாக இருந்ததால் இயற்கை சார்ந்த பூமித்தாய்க்கும், சூரியனுக்கும், மற்றும் தங்கள் விவசாயத்திற்கு உதவியாக இருந்த மாடுகளுக்கும் நன்றி சொல்லும் நாளாகத் தைப்பொங்கலைத் தொன்று தொட்டுக் கொண்டாடி வருகின்றனர்.

சூரியன் மகரராசிக்குச் செல்லும் தினமே தைப்பொங்கல் தினமாகும். தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல், அல்லது பட்டிப் பொங்கல் என்று சொல்லி, உழவர்களுக்குத் துணையாக இருந்த மாடுகளுக்குப் பொங்கிப் படைப்பர். இலங்கையில் பொதுவாக 2 நாட்களும், புலம்பெயர்ந்த நாடுகளில் கால்நடைகளை வீட்டில் வளர்க்க முடியாது என்பதால் ஒரு நாள் பொங்கலை மட்டும் கொண்டாடுவார்கள், தமிழ் நாட்டில் சில இடங்களில் போகிப் பண்டிகை, தைப்பொங்கல், பட்டிப் பொங்கல், காணும் பொங்கல் என்று நான்கு நாட்களும் கொண்டாடுகிறார்கள். போக்கி என்ற சொல்தான் மருவி போகி என்றாகியது. போகிப்பண்டிகைக்காகப் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பது போல, வீடு, வளவுகளைச் சுத்தம் செய்வர். தமிழ் நாட்டின் சில இடங்களில் ஜல்லிக்கட்டு, வழுக்கு மரம் ஏறுதல், உரி அடித்தல் போன்ற பல விதமான விளையாட்டுப் போட்டிகள் இத்தினங்களில் இடம் பெறுகின்றன.

ஆறாம் நிலத்திணையான கனடா, பனியும் பனி சூழ்ந்த பிரதேசம் என்பதால், தைமாதம் பனி விழும் காலமாகையால், வெளி முற்றத்தில் பானை வைத்துப் பொங்க முடியாது. அதனால் தமிழர்கள் தைப் பொங்கலை வீட்டுக்குள்ளேயே பொங்கிக் கொண்டாடுவர்.

பொங்கலுக்கு மின்சார அடுப்புத்தான் பாவிப்பார்கள். பொங்கலுக்குத் தேவையான பொருட்கள் அடங்கிய பொதிகள் கடைகளில் விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள். குறிப்பாக வாழையிலை, வெற்றிலை, மாவிலை, கரும்பு, தேங்காய், அறுகம்புல், பூக்கள் போன்றவற்றை விசேடமாக வேறு நாடுகளில் இருந்து தருவிப்பார்கள். கனடாவில் உள்ள கோயில்களிலும் தைப்பொங்கல் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இதைவிட தமிழர்களின் சங்கங்கள், ஒன்றியங்கள் தமது அங்கத்தவர்களுடன் தைப்பொங்கலை மண்டபங்களில் கொண்டாடுவர்.

500 குடும்பங்களுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட பீல்பிரதேச குடும்பமன்றத்தினர் ‘பொங்கலோ பொங்கல்’ என்ற எனது சிறுவர் நாடகத்தை மேடையேற்றிப் பல்லின மக்களிடையே பாராட்டைப் பெற்றிருந்தனர். இந்த நாடகத்தில் கனடாவில் பிறந்த சிறுவர் சிறுமியர் தமிழில் பேசி, பாடி நடித்திருந்தனர். அதில் இடம் பெற்ற பொங்கல் பற்றிய எனது சிறுவர் பாடலை, மகாஜனக்கல்லூரி வெளியிட்ட ‘குழந்தைக் கவிதைகள்’ நூலில் இருந்து உங்களுக்காகத் தருகின்றேன். உங்கள் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் எங்கள் பாரம்பரியத்தைச் சொல்லிக் கொடுங்கள்.



**“ஆதிகாலத்தில் விவசாயமே தமிழர்களின் முதன்மைத் தொழிலாக இருந்தது. தமிழர்கள் விவசாயிகளாக இருந்ததால் இயற்கை சார்ந்த பூமித்தாய்க்கும், சூரியனுக்கும், மற்றும் தங்கள் விவசாயத்திற்கு உதவியாக இருந்த கால்நடைகளுக்கும் நன்றி சொல்லும் நாளாகத் தைப்பொங்கலைக் கொண்டாடினர்.**

**தைபிறந்தால் வழிபிறக்கும்
பொங்கலோ பொங்கல்
தமிழர்களின் திருநாளாம்
பொங்கலோ பொங்கல்..**

**கதிரறுத்துப் பொங்கிடுவோம்
பொங்கலோ பொங்கல்
கதிரவனை வணங்கிடுவோம்
பொங்கலோ பொங்கல்..**

**உழைப்பாலே உயர்ந்திடுவோம்
பொங்கலோ பொங்கல்
ஒன்றுபட்டு வாழ்ந்திடுவோம்
பொங்கலோ பொங்கல்..**

கனடாவில் பட்டாசு கொளுத்துவது என்றால் அதற்கு முற்கூட்டியே அனுமதி பெற்றிருக்க வேண்டும். தைப்பொங்கலன்று கலை நிகழ்வுகளும் இடம் பெறும். தமிழ் வானொலிகள், தமிழ் தொலைக்காட்சிகளில் பொங்கல் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. தமிழ் பத்திரிகைகளும், இதழ்களும் பொங்கல் பற்றிய கட்டுரைகளையும், நிகழ்வுகள் பற்றிய படங்களையும் வெளியிட்டு ஆதரவு தருகின்றன. கோவிட்- 19 பேரழிவு காரணமாக 2020-2021 ஆண்டுகளில் சுகாதார சட்ட, திட்டங்களுக்கு அமைய கட்டுப்படுத்தப்பட்ட அளவு மக்களே பொங்கல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். ஆர்வமான மக்கள் ‘சூம்’ என்று சொல்லப்படுகின்ற மெய்நிகர் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டாடுகின்றனர். கனடிய தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் புலம் பெயர்ந்தாலும், தமிழர்களின் மொழி, பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றை புலம் பெயர்ந்த மண்ணில் கட்டிக்காப்பதில் மிகவும் கவனமாகச் செயற்படுகின்றார்கள்.

தாயகத்தில் பொதுவாக சூரியன் உதிக்கு முன் எல்லோரும் எழுந்து குளித்து, புத்தாடை அணிந்து பொங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வர். முதலில் முற்றத்தில் தண்ணீர் தெளித்து மொழுகி, அதன்பின் கோலம் போடுவார்கள். முதல்நாளே பொங்குவதற்குத் தேவையான பொருட்களை எல்லாம் தயாராக எடுத்து வைத்து விடுவார்கள். அடுப்புக்காகச் செங்கட்டி அல்லது அளவான மூன்று பெரிய கல்லை வைப்பார்கள். கோலத்தின் உள்ளே வடகிழக்கு மூலையில் தலைவழையிலை போட்டு, அதிலே நெல் அல்லது அரிசியைப் பரப்பி நிறைகுடம் வைப்பர்.

சைவசமயத்தவர் மாட்டுச்சாணத்தில் பிள்ளையார் பிடித்து அறுகம்புல் செருகி அருகே வைப்பார்கள். வாழையிலையில் வெற்றிலை பாக்கு வாழைப்பழம், மாம்பழம், மஞ்சள், கரும்புத் துண்டுகள் போன்றவற்றையும் வைப்பார்கள். பொங்குவதற்குப் புதிதாக வாங்கிய மண்பானையில் பாலும் தண்ணீரும் கலந்து அடுப்பில் வைப்பர். பொங்கிச் சரியும் போது ‘பொங்கலோ பொங்கல்’ என்று உரக்கச் சொல்லிச் சிறுவர் சிறுமியர் பட்டாசு கொளுத்தி மகிழ்வர். பொங்கல் தயாரானதும் தலைவாழை இலையில் படைத்து அத்துடன் வாழைப் பழம், மோதகம், வடை, அவல், கடலை மற்றும் பலகாராங்கள் போன்றவற்றையும் படைத்து சூரியனை வணங்குவார்கள். அதன்பின் உறவுகள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து வாழைப்பழத்துடன் பொங்கல் சாப்பிடுவர். மறுநாள் பட்டிப் பொங்கல் செய்வார்கள். கோயிலுக்கும், உறவினர்களின் வீடுகளுக்கும் சென்று விருந்துண்டு வருவர்.

எமது மாணவப் பருவத்தில் தைப் பொங்கல் காலத்தில் வானத்தில் பட்டம் விடுவது முக்கிய பொழுது போக்கு விளையாட்டாக இருந்தது. பாம்பன், கொக்கு, பிராந்தன், கொக்கன், படலம், எட்டு மூலை, பெட்டிக்கொடி, நட்சத்திரம் என்று பல வகையான பட்டங்கள் வானத்தில் பறக்கும். சிறுவர்கள் பொதுவாகக் பாம்பன், கொக்கு, படலம் போன்ற பட்டங்களைத்தான் பறக்க விடுவார்கள். அவற்றைக் கட்டுவது இலகுவானது. பாம்பன் பட்டத்திற்கு நீண்ட வால் இருக்கும், கொக்கு பட்டத்திற்கு வால் இருக்காது. இதிலும் ஒற்றை நொச்சை, இரட்டை நொச்சை என்று இருக்கும். பராந்தன், கொக்கன், எட்டுமூலை, பெட்டிக்கொடி போன்றவை கட்டுவது கொஞ்சம் கடினமானது என்பதால் பெரியவர்கள்தான் அப்படியான பட்டங்களைப் பறக்க விடுவர். பெரிய பட்டங்களுக்குப் பச்சைப் பனைமட்டை நாரை மிகவும் கவனமாக கத்தியால் மெல்லியதாகச் சீவி விண் செய்வார்கள். விண் பூட்டிய பட்டங்கள் வானத்தில் பறக்கும் போது பல மைல் தூரத்திற்கு விண் கூவும் சத்தம் கேட்கும். குரு விளையாட்டுக் கழகத்தில் அது ஒரு போட்டியாகவும் நடக்கும். காங்கேசந்துறையில் இன்ஸ்பெக்டர் குமார் என்று ஒரு பொலீஸ் அதிகாரி இருந்தார். ஒரு நாள் அவர் பொலீஸ்வண்டியில் குரு விளையாட்டுக் கழகத்திற்கு வந்து விண் பூட்டிய பட்டங்கள் எல்லாவற்றையும் இறக்கச் சொன்னார். அருகே உள்ள காங்கேசந்துறை விமானத் தளத்தின் ‘வயலெஸ் சிக்னல்’ இதனால் தடைப்படுவதாகக் காரணம் சொன்னார். அன்று அவர்தான் தான் எமது பாரம்பரிய விளையாட்டுக்கு முற்றுப் புள்ளி வைப்பதைத் தொடக்கி வைத்தார்.

புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் ‘தைத்திங்கள்’ பற்றிக் குறிப்புகள் இருக்கின்றன. ‘தைத் திங்கள் தண்கயம் படியும்,’ ‘தை’ த் திங்கள் தண்ணிய தரினும்’ போன்ற பாடல்களைக் குறிப்பிடலாம். ஆனால் தைப்பொங்கல் என்ற சொல் பாடல்களில் பாவிக்கப்படவில்லை. சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா பொங்கல் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. ‘வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும்..’ என்று உழவுத் தொழில் பற்றி ஔவையார் குறிப்பிடுகின்றார். ‘சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் - உழந்தும் உழவே’ என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். சினிமாப்பாடல்கள் கூட, அறுவடைக்குக் காத்திருக்கும் நெற்கதிர்கள் முற்றித் தலைசாய்த்திருப்பதை ‘வளர்ந்து விட்ட பருவப் பெண்போல் உனக்கு வெட்கமா, தலை வளைந்து சும்மா பார்க்கிறியே தரையின் பக்கமாய்’ என்று கவிஞர் மருதகாசி ‘பிள்ளைக்கனி அமுது’ படத்திற்காக நெற்கதிர்களைப் பெண்கள் நாணத்தோடு தலை குனியும் காட்சியை ஒப்பிட்டு எழுதியிருந்தார். சுண்ணாகத்தில் இருந்து மாசியப்பிட்டி வழியாகச் சண்டிலிப்பாய் செல்லும் போது வழுக்கி ஆற்றின் கரையோரமாக அழகான பச்சைப் பசெலென்ற வயற்காட்சிகளை நான் பார்த்து ரசித்த போதெல்லம் இந்தப் பாடல் நினைவில் வரும். இதேபோல இன்னும் சில சினிமாப்பாடல்கள் இருக்கின்றன. நிலவே நீ சாட்சி படத்தில் ‘தை மாதப் பொங்கலுக்கு’, தளபதி படத்தில் ‘தை பிறக்கும் நாளை விடியும் நல்ல வேளை’, மகாநதி படத்தில் ‘தைப்பொங் கலும் வந்தது பாலும் பொங்குது’ போன்ற சில சினிமாப் பாடல்கள் தைப் பொங்கல் திருநாளை நினைவூட்டுகின்றன. பாவேந்தர் பாரதிதாசனும், ‘தைம் முதல் நாள் பொங்கல் நன்னாள்’ என்று தைப்பொங்கல் பற்றிக் குறிப்பிடுகின்றார். எமது பாரம்பரிய திருநாட்களைப் பற்றி அடுத்த தலைமுறையினருக்கும் அறியத்தருவோம். ■

# விவாகரத்து செய்யப்போவதை மகளிடம் சொல்வது எவ்வாறு?

## நெட்பிலிக்ஸில் வெளிவந்திருக்கும் புதிய தொடர்




**விவாகரத்திற்கு செல்லும் போது குடும்பத்தில் நாளாந்த சிக்கல்கள் ஏற்படும். உறவினர்களுக்கு எப்படி சொல்வது? பிள்ளைக்கு எப்படிச் சொல்வது? நாளாந்த வாழ்க்கை மற்றும் வேலை முறையை எப்படி மாற்றுவது? சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போது ஏற்படும் சங்கடமான நிலைமையை எப்படி சமாளிப்பது? என கணவன் மனைவி இருவரும் முழிக்கும் காட்சிகளை இந்த தொடரில் சிரிப்புடன் அணுகி இருக்கிறார்கள்.**

**ரமணி - அவுஸ்திரேலியா**

ஆர்யா ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர். ஸ்ருதி ஒரு இளம் தொழில் முனைவாளர். இருவரும் திருமணமாகி புது டில்லியில் தங்களது மகளுடன் வாழ்ந்து வருகிறார்கள். இருவரினது திருமண வாழ்வும் நாளாக நாளாக விரிசல் அடைந்து கொண்டு செல்கிறது. இதனால் இருவரும் பிரிவதாக முடிவெடுக்கிறார்கள். ஆனால் அந்த செய்தியை யார்? எப்படி? எங்கே? மகளிடம் தெரியப்படுத்துவது என்பதில் கூட அவர்களிடையே முரண்பாடு ஏற்படுகிறது. ஆர்யாவும் ஸ்ருதியும் மகளிடம் தங்கள் பிரிவை பற்றி சொல்லுகிறார்களா? வெற்றிகரமாக பிரிகிறார்களா? என்பதனை நகைச்சுவையாக சொல்லும் நெட்பிலிக்ஸில் தொடரே அண்மையில் வெளிவந்த “டீகப்பல்ட்”.

இந்தியாவில் பெருநகரங்களில் தற்பொழுது வசதி படைத்தவர்கள் இருக்கும் குடியமர்வில் (gated community) ஒன்றில் வாழும் ஒரு குடும்பம் தான் ஆர்யா ஸ்ருதி குடும்பம். எழுத்தாளர் ஆர்யா தன் சக மனிதர்களுடன் பேசும் போது சமூகத்தின் பிழைகளை சுட்டிக்காட்டுவதும் விவாதிப்பதும் வழக்கம். அதனால் அவருக்கும் அவரை சார்ந்த குடியமர்வு அயலவர்களும் விசித்திரமான நிலைமகளை சந்திக்கும் பொழுது ஏற்படும் கருத்து பரிமாற்றங்களில் அவர் எட்டிக்கு போட்டியாக பேசுபவராகவும் விதண்டாவாதம் செய்பவராகவும் தென்படுவார். இதனால் அவர் மனைவி ஸ்ருதியும் மகளும் இக்கட்டான சூழ்நிலைகளில் மாட்டிக் கொள்வார்கள். இந்த சூழ்நிலைகள் பார்க்கும் போது வாய்விட்டு சிரிக்கலாம்.

பல்வேறு கதாப்பாத்திரங்கள் மூலமாக, புது டில்லியின் வசதி படைத்த சமூகத்தின் வாழ்க்கை முறை, வீட்டு வேலைகாரர்களை நடாத்தும் விதம், அடித்தட்டு மக்களை பார்க்கும் விதம், அவர்களின் சமூகம் பற்றிய இரட்டை நிலைப்பாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வு என பல்வேறு விடயங்களை நகைச்சுவையாக அலசுகிறது. எழுத்தாளர் ஆர்யாவின் நக்கலும் நையாண்டியும் கலக்கல். ஆயினும் சில இடங்களில் அதே காட் சிகள் பார்வையாளர்களை நெருடலுக்கும் உள்ளாக்கும்.

விவாகரத்திற்கு செல்லும் போது குடும்பத்தில் நாளாந்த சிக்கல்கள் ஏற்படும். உறவினர்களுக்கு எப்படி சொல்வது? பிள்ளைக்கு எப்படிச் சொல்வது? நாளாந்த வாழ்க்கை மற்றும் வேலை முறையை எப்படி மாற்றுவது? சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் போது ஏற்படும் சங்கடமான நிலைமையை எப்படி சமாளிப்பது? என கணவன் மனைவி இருவரும் முழிக்கும் காட்சிகளை இந்த தொடரில் சிரிப்புடன் அணுகி இருக்கிறார்கள். ஆயினும் மகளின் வாழ்க்கை யில் ஏற்படும் தாக்கங்களை இன்னும் கொஞ்சம் கூட அலசி ஆராய்ந்து இருக்கலாம்.

நடிகர் விஜய் நடிப்பில் வெளியான நண்பன் படம் ஆங்கிலத்தில் வெளியான பிரபலமான நாவலான “பைவ் பொயிண்டஸ் சம் ஒன்” நாவலை தழுவி எடுக்கப்பட்டது. அந்த நாவலை எழுதிய நாவலாசிரியரான சேத்தன் பாகத் இந்தத் தொடரில் ஆர்யாவின் போட்டியான எழுத்தாளராக, தன்னைத் தானே உருவகித்து நடித்திருப்பது, இந்த தொடரின் சிறப்பம்சம். சும்மா சொல்லக் கூடாது சேத்தனின் சேட்டைகள், இது அவரின் முதல் நடிப்பு முயற்சியா! என்று உங்களை வியக்க வைக்கும்.

ஆர்யா கதாபாத்திரமாக நடித்த மாதவனும் ஸ்ருதியாக நடித்த சுர்வீனும் தங்கள் கதாப்பாத்திரங்களில், தம்பதிகள் கால ஓட்டத்தில் ஏற்படும் இடைவெளியில் எவ்வாறு சிந்திப்பார்கள், செயற்படுவார்கள் என்பதனை தத்துரூபமாக திறம்பட நடித்துள்ளார்கள்.

எவ்வளவு தான் நகைச்சுவையாக இருந்தாலும் விமர்சகர்கள மத்தியில், இந்தத் தொடர் ஒரு ஆணாதிக்க, கண்ணோட்டத்துடன் எடுக்கப்பட்டது, உடல் அமைப்பு, மதநம்பிக்கை மற்றும் சிறுவர்களை, ஏளனம் செய்யும் காட்சிகள், நெருடலான நகைச்சுவைக் காட்சிகள் கொண்டுள்ளது என கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளானது.

ஆக மொத்தத்தில் ஒன்றில் இந்தத் தொடர் ஒரு சாராரால் போற்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது இல்லையேல் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

ரசிகர்களால் விரும்பப்பட்டும் விமர்சகர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டதுமான “டீகப்பல்ட்” தொடரை மாதவனின் நகைச்சுவையான நடிப்புக்காகவும், கணவன் மனைவி உறவில் ஏற்படும் பிரிவை வித்தியாசமான கோணத்துடன் காட்டுவதாலும், திறந்த மனத்துடன் பார்த்தால் நகைச்சுவையாக பார்க்கலாம்.



# உலகின் முதல் ரோபோ நீதிபதி!



அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் உலகிற்கே மிகக் கடுமையான போட்டியாக விளங்கும் சீனா தற்போது செயற்கை நுண்ணறிவை கொண்ட ஒரு ரோபோ நீதிபதியை உருவக்கியுள்ளது.

உலகிலேயே முதன் முறையாக செயற்கை நுண்ணறிவை கொண்டு ஒரு ரோபோ நீதிபதியை சீனா உருவாக்கியுள்ளது. இந்த ரோபோ நீதிபதி வழக்கு விசாரணைகளை கேட்டறிந்து 97 சதவீதம் துல்லியமான தீர்ப்புகளை வழங்கும் என அதன் வடிவமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த ரோபோ நீதிபதி, நீதிமன்றத்தில் வாதாடப்படும் வாதங்களை கேட்டு தீர்ப்புகளைத் தரும் வல்லமை படைத்தது எனக் கூறப்படுகிறது. அந்த வகையில், கடன் அட்டை மோசடி, திருட்டு மற்றும் விபத்து போன்ற வழக்குகளை இதனால் கையாளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுள்ளது.

இதனால், வழக்கறிஞர்களின் பணிச்சுமை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 2015 இல் இருந்து 2020-ஆம் ஆண்டு வரை பதிவாகியுள்ள வழக்குகளின் தரவுகளை இந்த ரோபோவிற்கு பதிவேற்றப்பட்டிருக்கிறது.

என்னதான் இந்த ரோபோ நீதிபதி ஒரு அருமையான படைப்பு என்றாலும், மக்கள் மத்தியிலும் பிற வழக்கறிஞர்கள் மத்தியிலும் இது பெரிதளவில் நம்பிக்கையை ஈட்டவில்லை. மேலும், இந்த ரோபோவால், வழக்குகளை கேட்டு தவறுகளை கண்டறிய முடிந்தாலும், இதனால் சரியான தீர்ப்பை வழங்க முடியாது எனவும், அவ்வாறு ஒரு நிலை வந்தால் அதற்கு யார் பொறுப்பேற்பார்கள்? அந்த இயந்திரமா அல்லது அதனை வடிவமைத்தவர்களா என்ற கேள்வியையும் வழக்கறிஞர்கள் தரப்பிலிருந்து முன்வைக்கின்றனர்.

எதுவாக இருப்பினும், சீனாவின் இந்த படைப்பைக் கண்டு உலக நாடுகள் அனைத்தும் வியப்பில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# கவனச்சிதறல் பிரச்னையை தீர்க்கும் 12 நிமிட பயிற்சி..!

இன்றைக்கு நாம் வாழும் பல்வகைமான வாழ்க்கையில் கவனத்தை சிதறவைப் பதற்கான காரணிகள் எக்கச்சக்க மான தாக இருக்கிறது. கவனச்சிதறல் என்கிற பிரச்னைக்கு நாம் சுலபமாக ஆட்பட்டு விடுவதுதான் இதற்குக் காரணம். இந்த விதக் கவனச்சிதறலுடன் தான் நாம் வாழ வேண்டுமா, இதிலிருந்து தப்பிக்க வேறு வழியே இல்லையா என்று கேட்டீர்கள் எனில், இதற்கான வழிகள் இருக்கவே செய்கின்றன. சரியான பயிற்சியின் மூலம் வித்தியாசமாகக் கவனம் செலுத்தும் பண்பை நாம் வளர்த்துக் கொண்டால், தீர்ந்தது பிரச்னை. இந்தப் பண்பை வளர்த்தெடுப்பது எப்படி என்பது குறித்து சொல்லும் 'பீக் மைண்ட்' (Peak Mind) புத்தகத்தைத்தான் நாம் இப்போது பார்க்கப்போகிறோம்.

**கவனச்சிதறல் என்பது மிக அதிக அளவில் உள்ள காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். இந்த நிலையில், அது குறித்த மிகவும் அவசியமான ஆராய்ச்சி முடிவுகளால் பெறப்பட்ட மாற்றுச் சிந்தனைகள் பலவற்றை நாம் அறிந்து, பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலமே கவனத்தைக் கட்டுக்குள் வைக்கும் கலைக்கான பயிற்சியை சொல்லும் இந்தப் புத்தகத்தை வாழ்க்கையில் முன்னேற்றம் காண நினைக்கும் அனைவரும் கவனத்துடன் படித்து சிறப்பான பலன்களைப் பெற்று மகிழலாம்.**



### கவனம் குறித்து கவனமாக இருங்கள்

"குறைவான கவனம், வேறொன்றில் கவனம், பல விஷயங்களில் கவனம், ஒன்றுக்கொன்று தொடர்பில்லா கவனம் எனப் பல வகைகளில் நீங்கள் கொள்ளும் கவனத்தை வகைப்படுத்தலாம். ஒரு விஷயத்தில் நீங்கள் வைக்கும் கவனமே நீங்கள் அதிலிருந்து எதை உணர்கிறீர்கள், கற்றுக்கொள்கிறீர்கள் மற்றும் நினைவில் நிறுத்துகிறீர்கள் என்பதைத் தீர்மானிப்பதுடன், அந்த விஷயம் குறித்து நிதானமாக இருக்கிறீர்களா, என்ன மாதிரியான எதிர்வினையை அந்த விஷயத்தில் ஆற்றுகிறீர்கள் என்பதைத் தீர்மானிக்கிறது.

கவனம் என்பது மிகவும் கவனத்துடன் கையாளப்பட வேண்டியதொரு விஷயம். கவனம் மதிப்பு மிக்கது. அது உங்களிடம் இருந்து நீங்கள் உணராமலேயே திருடப்படலாம் என்பதை முதலில் புரிந்துகொள்ளுங்கள்" என்கிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியையான அமிஷி பி.ஜா (Amishi P.Jha).

### கவனம் குறித்த சில உண்மைகள்...

"மூளையை நோக்கி எக்கச்சக்கமான விஷயங்கள் வருகின்றன. அவற்றில் முக்கிய மானவை மட்டுமே எடுத்துக்கொள்ள ஒரு வடிகட்டியாகக் கவனம் என்பது மூளையால் உபயோகிக்கப்படுகிறது. இந்த வடிகட்டியை உபயோகிப்பதாலேயே மூளையானது "ஓவர் லோட்" ஆகாமல் பார்த்துக்கொள்கிறது.

கவனம் என்பது சக்தி வாய்ந்த ஒன்று. அதுதான் மூளையின் அதிகாரி. ஏனென்றால், அதுதான் மூளைக்கு எந்த விஷயங்களை எப்படிக் கையாள வேண்டும் என்பது குறித்த வழிகாட்டியாய் இருக்கிறது. எந்த அளவுக்கு கவனம் செலுத்துகிறோமோ, அந்த அளவுக்கு அந்த விஷயத்தின் மகிமையை நாம் உணர்ந்து கொள்கிறோம்.

இரண்டாவதாக, கவனம் என்பது எளிதில் உடைந்துபோகிற தன்மை கொண்டது. அதாவது, எளிதில் சிதறக்கூடிய ஒன்று. அதுவும் எப்போதெல்லாம் நாம் மனஅழுத்தம், பயம் அல்லது கெட்ட மனநிலையில் இருக்கிறோமோ, அப்போதெல்லாம் கவனம் என்பது வெகுவாகச் சிதறிப்போய்விடுகிறது.

மூன்றாவதாக, கவனம் என்பது பயிற்சியின் மூலம் அதிகப் படுத்திக்கொள்ள முடியும். எங்களுடைய ஆராய்ச்சியின் வாயிலாக, நாங்கள் கண்டறிந்தது அதைத்தான். சரியான பயிற்சிகள் மூலம் நம்முடைய கவனம் செலுத்தும் திறனை அதிகரித்து வாழ்வில் எதிர்கொள்ளும் பல்வேறு சவால் களையும் முழுமையாகக் கையாண்டு வெற்றி பெறலாம்" எனக் கவனம் பற்றி நமக்கு அதிகம் தெரியாத பல உண்மை களைச் சொல்கிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியை.

### களவாடப்படும் கவனம்...

"இன்றைக்குக் கவனம் குறித்த ஒரு நெருக்கடியான நிலையில் நாம் வாழ்ந்து வருகிறோம். கவனம் முழுவதுமாகக் குறைந்து, சோர்வடைந்த மூளையுடன், ஆக்கக்குறைந்த செயல்திறனுடன், வாழ்வில் சாதிக்க வேண்டிய விஷயங் களைச் சாதிக்காமல் வாழ்ந்து வருகிறோம். இதற்குக் காரணம், கவனத்தைப் பெற போட்டி போடும் வர்த்தக ரீதியிலான உலகம் (அட்டென்ஷன் எகானமி - செய்தி, பொழுதுபோக்கு மற்றும் சோஷியல் மீடியா உள்ளிட்டவை).

மனிதர்களின் கவனத்தை வர்த்தக ரீதியிலாகப் பெறுதலுக் கான சரியான சட்டதிட்டங்கள் இல்லாத காரணத்தால் நம்முடைய விலை மதிப்பில்லாத கவனம் என்பது பெருமளவில் கொள்ளையடிக்கப்படுகிறது. பல மனிதர்களின் கவனம் திரட்டப்பட்டு, மறுபேக்கேஜிங் செய்யப்பட்டு அதிக விலைக்கும் மிக அதிக லாபத்துக்கும் விற்கப்படுகிறது. மனோதத்துவ நிபுணர்களும், சாஃப்ட்வேர் பொறியாளர்களும், செயற்கை நுண்ணறிவும் இணைந்து நமக்கு எதிராகக் கவனத்தைக் களவாடும் நோக்குடன் பணியாற்றுகிற இந்த உலகில் நாம் இவற்றுக்கு இரையாகி நம்முடைய கவனம் எனும் செல்வத்தை நாமே வலியப்போய் இழக்கிறோம்" என்கிறார் ஆசிரியர்.

### என்னதான் தீர்வு?

"அடடா, அப்படியென்றால் என்னுடைய கவனிக்கும் திறனில் குறைபாடா..." என்று கவலைப்படாதீர்கள். உங்களுடைய கவனிக்கும் திறனில் எந்த விதக் குறைபாடும் இல்லை. நம்முடைய மூளை யானது கம்ப்யூட்டர் அல்காரிதத்துக்கு ஈடுகொடுத்து இயங்கி வருகிறது. நம்முடைய மூளையானது சரியான முறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதற்குத் தலைசிறந்த சான்றாகும்.

இன்னும் சொல்லப்போனால், நம்முடைய கவனம் என்பது மிகச் சிறப்பாக இருப்பதாலேயே நாம் நம்மை சுலபத்தில் நம்முடைய எதிராளிகளிடம் (பொழுதுபோக்கு மற்றும் சோஷியல் மீடியா போன்ற) இழந்துவிடுகிறோம். உங்கள் கவனத்தை இவற்றிலிருந்து திருப்புகிறேன் பேர்வழி என்று சண்டையிடக் கிளம்பினீர்கள் எனில், ஒருபோதும் உங்களால் வெற்றி பெற முடியாது.

இன்றைக்குக் கவனத்தை சிறப்பாகக் கையாண்டு அதிகரிப்பது எப்படி என்பதைச் சொல்லித் தரும் பலரும், கவனச் சிதறலுக்கான காரணிகளின் மீது ஒரு யுத்தம் நடத்துங்கள் என்கிறார்கள். உதாரணமாக, "செல்போனைத் தொடாதீர்கள், நோ சோஷியல் மீடியா" என்பது போன்றவைதான் அவை.

இதைச் செய்து ஒருநாளும் உங்களால் வெற்றி பெற முடியாது. இவையெல்லாம் ஒரு கடலில் உள்ள வேகமானதொரு சுழல்நீரில் எதிர்நீச்சல் அடிப்பதற்குச் சமமானது. இதனால் எந்தவிதமான பலனும் இருக்காது. இந்தச் சூழ்நிலையில் நமக்குத் தேவையானது கவனச் சிதறலை உருவாக்கும் விஷயங்களில் இருந்து பாதுகாப்பே ஒழிய அவற்றை வெல்வதல்ல. அவற்றை ஒருபோதும் நம்மால் வெல்லவும் முடியாது.


எங்களுடைய ஆராய்ச்சியின் போது, ஆராய்ச்சிக்கு உட்படுத்தப் பட்ட நபர்களிடத்தில் "கவனமாக இருங்கள்..."என்று பலமுறை கூறினாலும் அவர்களால் முழுமையான கவனம் செலுத்த முடியாத சூழலிலேயே இருந்தனர். ஒரு சிலசமயம், "செலுத்தப்படும் கவனத்துக்கு ஏற்றாற்போல் பணம் தருகிறோம்" என்றெல்லாம் சொல்லிப் பார்த்தும் எந்தவித பிரயோஜனமும் இல்லை. இந்த மாதிரியான சூழ்நிலையில் நாம் முதலில் செய்ய வேண்டியது, நம்முடைய கவனம் குறித்து கவனம் கொள்ள வேண்டியது என்பதைத் தான். கவனம் என்றால் என்ன, அது எப்படி மூளையினுள் கட்டமைக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

கவனம் என்பது ஒரு சில விநாடிகளே ஒளிர்கிற ஒரு ஃப்ளாஷ்லைட்டைப்போல் (Flashlight) என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இன்னமும் சொல்ல வேண்டுமெனில், கவனம் என்பது தொடர்ந்து எரிகிற ஒரு ஃப்ளட் லைட் டைப் போலான (Floodlight) ஒன்று என்ற நினைப்பில் இருந்து நாம் மொத்தமாக வெளியே வர வேண்டும் என்கிறார் ஆசிரியை.

### எப்படித் தவிர்க்கலாம்?

சரி, கவனச் சிதறலைத் தடுப்பதற்கான முயற்சியை நாம் செய்யும்போது, நாம் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களாகப் பின் வருவனவற்றைக் கூறுகிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியை.

"கவனத்தை அதிகரிப்பதற்கு முயற்சி செய்யும் நீங்கள், அதற்கான நடைமுறையைக் கடைப்பிடிக்கும்போது நீங்கள் உங்களுடைய மூளையை சுத்தப்படுத்தப்போவது இல்லை. உங்களுடைய நோக்கம், உங்களுடைய மூளையை அமைதிப் படுத்தவோ, ஓய்வெடுக்க வைக்கவோ முயல்வதில்லை. உங்கள் மூளையை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டியதெல்லாம் இல்லை. குறிப்பாக, அப்படிப்பட்ட நிலையொன்று இல்லவே இல்லை" என்று சொல்லும் ஆசிரியர், இந்த அடிப்படை வித்தியாசத்தைப் புரிந்து கொண்ட பின்னர், நான்கு வாரங்களுக்கு தினசரி 12 நிமிட அளவில் செய்ய வேண்டிய பயிற்சிக்கான விஷயங்களையும் அதற்கான அட்டவணையையும் இந்தப் புத்தகத்தில் தந்திருக்கிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியை. நான்கு வாரம் அன்றாடம் 12 நிமிட நேரம் ஆசிரியைக் கூறியுள்ள நடைமுறையைப் பின்பற்றினால் கவனம் கொள்ளும் கலை என்பது அனைவருக்கும் முழுமையாக வசப்படும் என்று சொல்லி முடிக்கிறார் ஆசிரியை. கவனச்சிதறல் என்பது மிக அதிக அளவில் உள்ள காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். இந்த நிலையில், அது குறித்த மிகவும் அவசியமான ஆராய்ச்சி முடிவுகளால் பெறப்பட்ட மாற்றுச் சிந்தனைகள் பலவற்றை நாம் அறிந்து, பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது. இதன் மூலமே கவனத்தைக் கட்டுக்குள் வைக்கும் கலைக்கான பயிற்சியை சொல்லும் இந்தப் புத்தகத்தை வாழ்க்கையில் முன்னேற்றம் காண நினைக்கும் அனைவரும் கவனத்துடன் படித்து சிறப்பான பலன்களைப் பெற்று மகிழலாம். ■



## வில்லியானார் வரலட்சுமி



அகண்டாவின் மிகப்பெரிய வெற்றிக்கு பிறகு பாலகிருஷ்ணா நடிக்கும் அவரின் 107வது படத்தை கோபிசந்த் மலினேனி இயக்குகிறார்.

இதில், பாலகிருஷ்ணாவுக்கு நாயகியாக ஸ்ருதி ஹாசன் நடிக்கிறார். இந்தப் படத்தில் வில்லியாக வரலட்சுமி சரத்குமார் நடிக்கிறார். ஜெயம்மா என்ற பாத்திரத்தில் அவர் நடிப்பதாக படக்குழு அறிவித்துள்ளது.

ஒரே தெலுங்கு படத்தில் கமல்ஹாசன் மகள் ஸ்ருதி நாயகியாவும், சரத்குமார் மகள் வரலட்சுமி வில்லியாகவும் நடிப்பது குறிப்பிடத்தக்கது.



## கண்டனத்திற்குள்ளாகும் நிதி

நிதி அகர்வால் ஒரு சில படங்களிலேயே நடித்துள்ளார். அவ்வளவு பிரலமானவர் இல்லை என்றபோதிலும் கவர்ச்சிப் படங்களை சமூகவலைத்தளங்களில் வெளியிட்டு பரபரப்பை அடிக்கடி ஏற்படுத்தி விடுவார்.

இந்நிலையில், அவர் நடித்த மதுபான விளம்பரம் ஒன்று வெளியானது. அதில், ஒரு கோப்பையில் மதுவை ஊற்றி அவர் நுகர்ந்து பார்க்கும் காட்சியும் அந்த மதுபானம் சுவைக்கவும் பருகவும் சிறந்தது என்று பேசும் காட்சியும் இடம்பெற்றுள்ளன. இது இந்தியாவின் மிகச்சிறந்த மது வகை என்று பாராட்டுச் சான்றிதழும் வழங்குகிறார்.

இந்த விளம்பரம் இளைஞர்களை மது அருந்த தூண்டுவதாக சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள். ரசிகர்களும், சமூக வலைத்தளத்தில் அவரை பின்பற்றுகிறவர்களும் கடுமையாக விமர்சித்து வருகிறார்கள்.



## திரை விமர்சனம்




**திரைப்படம்: தீர்ப்புகள் விற்கப்படும்**
**நடிகர்கள் : சத்யராஜ், ஸ்மிருதி வெங்கட்**
**இயக்கம் : தீரன்**
**இசை : எஸ். என். பிரசாத்**

பெண்கள் மீதான பாலியல் கொடுமைகளுக்கு கடும் தண்டனை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம்தான் பலரிடம் உள்ளது. அந்த எண்ணத்தின் அடிப்படையில் ஓர் அதிரடியான கதையே இந்தத் திரைப்படம்.

சத்யராஜ் ஓர் அரசாங்க மருத்துவர். அவரின் ஒரே மகள் ஸ்மிருதி வெங்கட்டும் மருத்துவர். மகள் ஸ்மிருத்திக்கும் மருத்துவரான யுவன் மயில்சாமிக்கும் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. இந்நிலையில் ஸ்மிருத்தியை மூன்று இளைஞர்கள் பாலியல் வன்புணர்வு செய்கின்றனர். தன் மகளுக்கு நேர்ந்த இந்தப் பெரும் கொடுமையை எதிர்த்து நீதிமன்றம் செல்கிறார் சத்யராஜ். ஆனால், அந்த மூன்று இளைஞர்களில் ஒருவரின் அப்பாவான கோடீஸ்வரர் மதுசூதனன் அவரது பண பலத்தால் வழக்கை ஒன்றும் இல்லாமல் செய்துவிடுகிறார். இதனால், ஆத்திரமடையும் சத்யராஜ், மதுசூதனின் மகனைக் கடத்தி, அவரின் ஆண் உறுப்பை சத்திரசிகிச்சை மூலம் அகற்றி விடுகிறார். அந்த உறுப்பைத் தர வேண்டுமென்றால் சில கொலைகளைச் செய்ய வேண்டும் என மதுசூதனனுக்கு நிபந்தனை விதிக்கிறார் சத்யராஜ். அதன்பின் என்ன நடந்தது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

படத்தின் ஆரம்பக் காட்சிகள் சில மட்டும்தான் அலைக்கழிப்பால் தடுமாற்றமாக இருக்கிறது. அதன்பிறகு காட்சிகள் விறுவிறுப்பாகவே நகர்கின்றன. இப்படி ஒரு தண்டனையை இதுவரை எந்த நாயகனும் வில்லனுக்குக் கொடுத்ததில்லையே என்பதுதான் படத்தின் சுவாரசியம். இன்னும் சில பல திருத்தங்களை செய்திருந்தால் சிறப்பான அதிரடிப் படமாக அமைந்திருக்கும்.

சத்யராஜ் தன் மகள் ஸ்மிருதிமீது அவ்வளவு பாசம் வைத்துள்ளார். தாய் இல்லாத மகளை, அன்பாக வளர்த்து அவரையும் மருத்துவராக்கி, நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற ஒரு சராசரி அப்பவாக பாசக் காட்சிகளில் கண் கலங்க வைக்கிறார். அதே சமயம் பழிவாங்கல் எண்ணம் வந்ததும் வழக்கமான சத்யராஜை படத்தில் பார்க்க முடிகிறது. தன் கையால் யாருக்கும் எந்த தண்டனையும் கொடுக்காமல் எதிராளிகளின் கையை வைத்தே அவர்களை அடிக்க வைப்பதும் தனி நாயகத்தன்மைதான்.

அன்பான மகளாக ஸ்மிருதி வெங்கட். கொஞ்ச காட்சிகளில் வந்தாலும் அனுதாபத்தை அள்ளிக் கொள்கிறார். அவரைக் காதலித்து கை பிடிக்க நினைக்கும் கதாபாத்திரத்தில் யுவன் மயில்சாமி. பிரதான வில்லனாக மதுசூதனன். படம் முழுவதும் வருகிறார். அவருக்கு உறுதுணையாக ஹரிஷ் உத்தமன். ஒரு காலத்தில் பல படங்களில் வில்லனாக கலக்கிய சத்யராஜின் முன் இவர்களது வில்லத்தனம் தடுமாறத்தான் செய்கிறது.

இம்மாதிரியான படங்களுக்கு பாடல்கள் அவசியமில்லை. பிரசாத்தின் பின்னணி இசை காட்சிகளின் தாக்கத்திற்கு இன்னும் விறுவிறுப்பைக் கூட்டுகிறது.

'தீர்ப்புகள் விற்கப்படும்' என்பது படத்திற்குப் பொருத்தமான தலைப்புதான்.



## பின்சென்றது வலிமை

வினோத் இயக்கத்தில் அஜித், ஹுயுமா குரேஷி, கார்த்திகேயா உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகி உள்ள படம் 'வலிமை'. தமிழகத்தில் மீண்டும் ஒரு கொரோனா அலை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து வரும் 13ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்ட இந்தப் படம் பிற்போடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தருணத்திலும் திரையரங்குகளில் ரசிகர்கள் மகிழ்ச்சியுடன் படம் பார்க்க வேண்டும். ரசிகர்களின் பாதுகாப்பு எப்போதும் முக்கியம். தொற்று அதிகரிப்பால் வலிமை படத்தின் வெளியீட்டை தள்ளி வைக்கிறோம். அனைவரும் சுகாதார விதிகளை பின்பற்றுங்கள் என்று படக்குழு கூறியுள்ளது.



## ஹன்சிகா வசம் 9 படங்கள்

ஹன்சிகா மோத்வானி தமிழ் படத்தில் நடித்து முழுசா 2 வருடங்கள் கடந்துவிட்டன. அவர் நடித்து முடித்துள்ள மகா படம் இன்னும் வெளியாகவில்லை.

ஆனால், ஹன்சிகா இந்த ஆண்டில் மட்டும் 9 திரைப்படங்களில் நாயகியாக நடிக்கவுள்ளார். இதன்படி, பார்ட்னர், ரவுடி பேபி, மை நேம் இஸ் ஸ்ருதி, 105 மினிட்ஸ், ஒரு கல் ஒரு கண்ணாடிக்குப் பிறகு இயக்குநர் ராஜேஷ் இயக்கத்தில் இரண்டாவது முறையாக இணையும் ஹாட்ஸ்டார் ஒரிஜினல்ஸ் மற்றும் வாலு புகழ் இயக்குனர் விஜய் சந்தருடன் இணையும் ஒரு படமும் அடங்கும். இது தவிர இயக்குனர் ஆர் கண்ணன் இயக்கத்தில் ஒரு படமும் மேலும் சில படங்களிலும் நடிக்கவுள்ளார் என்று தெரிய வருகின்றது.

## சமந்தா பாணியில் ரெஜினா

புஷ்பா படத்தில் சமந்தா ஆடிய "ஓ... சொல்றியா மாமா ஓ...ஓ.. சொல்றியா...", பாடல் பட்டிதொட்டி எங்கும் பரவி, யூ ரியூப்பிலும் சாதனை படைத்தது.

இப்போது சமந்தாவின் பாணியில் சிரஞ்சீவியின் ஆச்சார்யா படத்தில் ஒரு பாடலுக்கு ஆடியுள்ளார் ரெஜினா கசென்ட்ரா. இந்தப் பாடலும் சமந்தாவின் பாடல் போன்று வரவேற்பு பெறுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த படத்தில் சிரஞ்சீவி, ராம்சரண் நாயகர்களாக நடித்துள்ளனர். சிரஞ்சீவி ஜோடியாக காஜல் அகர்வால் நடிக்க, ராம்சரண் ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள்ளார்.

# கறை படியாத வீரன்




பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரரும் முன்னாள் அணித் தலைவருமான முஹமது ஹபீஸ் கடந்த வாரம் தனது ஓய்வை அறிவித்தார்.

ஊழல், இலஞ்சம் என்பவற்றுக்கு கிரிக்கெட் உலகில் அதிகம் பெயர் பெற்றது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை. ஆனால், ஊழல், இலஞ்சத்துக்கு எதிராக மட்டுமல்ல கிரிக்கெட் சபையின் மோசமான செயல்களுக்கு எதிராகவும் தைரியமாகவும் குரல் கொடுத்தவர் ஹபீஸ். இதனால், அவருக்கு தி புரொபஷர் என்ற பெயரிட்டு சகவீரர்கள் - ஊடகங்கள் - ரசிகர்கள் அழைத்தனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை பகைத்து அணியில் இடம்பிடிப்பது என்பது நினைத்தும் பாரக்க முடியாதது. ஆனால், அத்தகைய இடத்தில் 18 வருடங்கள் தான் நினைத்தவற்றை தைரியமாக வெளிப்படுத்திக் கொண்டு கனவான் வீரனாகவே இருந்தார் ஹபீஸ்.

பலத்த சவாலுக்கு மத்தியில் சகலதுறை வீரராக - அனைத்து கிரிக்கெட் வடிவங்களிலும் இடம்பிடித்தவர் ஹபீஸ். இதனால், சர்வதேச அரங்கில் 12 ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களையும், 250இற்கும் அதிகமான விக்கெட்களையும் அவரால் வீழ்த்த முடிந்தது. துடுப்பாட்டம், பந்துவீச்சு என்று இரண்டிலும் இந்த மைல்கற்களை எட்டிய ஒரே சாதனை வீரர் இவர்மட்டும்தான். ஆனாலும், அவரால் வசீம் அக்ரம், இன்சமாம், அப்ரிடி, அன்வர் அளவுக்கு பிரபலம் பெற முடியவில்லை என்பது சோகமே.

ஆனால், அவரின் துடுப்பாட்டமும், பந்துவீச்சும் பாகிஸ்தான் அணிக்கு பெரும் நன்மைகளை அளித்துள்ளது. 2017 சம்பியன்ஸ் கிண்ணத்தில் அவரின் அதிவேக அரைச்சதம்தான் பாகிஸ்தான் அணிக்கு கிண்ணத்தைப் பரிசளித்தது. 2012 பாகிஸ்தான் அணியின் இந்திய சுற்றுப் பயண கிண்ணத் தொடரை பாகிஸ்தான் இழந்தாலும், ஹபீஸின் அற்புதமான ஆட்டம் ரசிகர்களை இன்றும் விட்டகலாதது.

40 வயதிலும் கிரிக்கெட் உலகில் அதிரடி காட்டிய வீரர் என்ற பெருமை அவருக்கு உண்டு. இந்தப் பெருமையை வேறு பல வீரர்களுக்கு கிடைக்கவில்லை. இந்தக் காலத்தில் நியூசிலாந்துக்கு எதிராக 57 பந்துகளில் 99 ஓட்டங்களை ஆட்டடமிழக்காமல் குவித்து சாதித்தார்.

அணித் தலைவராக பாகிஸ்தான் அணிக்காக அவர் பெற்ற வெற்றிகள் மகத்தானது. இளம் வீரர்களுக்கு மகத்தான வழிகாட்டியாக இருந்த அவர், அணியின் தலைவராக இருந்தாலும் - இல்லாவிட்டாலும் தனது கருத்தை வெளிப்படையாக கூறுவார். இதனால், கிரிக்கெட் சபையும் அவரும் பல தடவைகள் மோத நேர்ந்தது.

அண்மைக்காலமாக பாகிஸ்தான் அணியில் ஊழல், இலஞ்ச குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான வீரர்களின் வருகையை பகிரங்கமாக எதிர்த்தவரை ஒதுக்கி வைத்தது கிரிக்கெட் சபை. இந்த நிலையில், தனது ஓய்வை அறிவித்த ஹபீஸ் தனது வழக்கமான பாணியிலேயே பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை குற்றவாளி கூண்டில் ஏற்றிவிட்டே ஓய்வை அறிவித்துள்ளார்.

ஆனால், பிறீமியர் லீக் தொடர்களில் ஹபீஸின் அதிரடி ஆட்டத்தை ரசிகர்கள் தொடர்ந்து காணலாம் என்பது ஆறுதல்...!



# மறுப்புக்கான பதிலடி!

இரண்டரை வருட இடைவெளிக்கு பின்னர் அவுஸ்திரேலிய அணிக்காக களமிறங்கிய உஸ்மான் கவாஜா அடித்த சதம், அந்த அணி நான்காவது போட்டியில் வலுவான நிலையை எட்டக் காரணமாக அமைந்தது.

ஆனால், உஸ்மான் கவாஜா ஆஸி. கிரிக்கெட் உலகில் முக்கியமான வீரர். ஏனெனில், அந்த அணிக்காக அறிமுகமாகி விளையாடிய முதல் இஸ்லாமியர் அவர் தான்.

டெஸ்ட், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகள் என அனைத்திலும் அவர் நன்றாகவே விளையாடினார். எல்லா சிறந்த வீரர்களும் எதிர் கொண்ட பிரச்னையை அவரும் 2019ஆம் ஆண்டு எதிர் கொண்டார். இதனால், அந்த ஆண்டு ஆஷஷ் தொடரில் விளையாடும் அணி யில் அவர் இடம்பிடிக்க வில்லை. ஆனால், ஒருநாள் போட்டியில் சிறப்பாக சாதித்தும் அணியில் ஓரங் கட்டப் பட்டார். 2020ஆம் ஆண்டு சம்பளப் பட்டியலில் உள்வாங்கப்படவில்லை.

இரண்டரை ஆண்டுகள் அணியில் இடமின்றி விரக்தியிலிருந்த அவர் அணித் தெரிவு குறித்து வெளிப்படையாகவே அதிருப்தி தெரிவித்தார். அதில் நிர்வாகத்திலிருந்கும் இன, மத, நிற துவேசம் குறித்தும் பேசியிருந்தார். "இந்த நிறத்தில் இருப்பவர்களெல்லாம் அவுஸ்திரேலிய அணிக்கு ஆட தகுதியற்றவர்கள். உன்னால் அவுஸ்திரேலிய அணிக்கு ஆடவே முடியாது", என்று சில வீரர்களே இனவெறி தாக்குதல் நடத்தி யுள்ளனர். இதையெல்லாம் தாண்டி, மீண்டும் உள்ளூர் போட்டிகளில் களமிறங்கி மீண்டும் ஆஷஷ் தொடரிலேயே அணிக்கு நுழைந்தார்.

ஆனால், விளையாடும் அணிக்குள் முதல் 3 போட்டிகளில் அவருக்கு இடம் கிடைக்கவில்லை. நான்காவது போட்டியில் ஐந்தாவது வீரராக களமிறங்கிய அவர் ஆடிய ஆட்டம் அடுத்த போட்டிகளில் அவரின் இடத்தைத் தக்கவைத்துள்ளது. அபாரமான சதம் கடந்த கவாஜா, பிரோட், அண்டர்சன், மார்க் வூட் என்ற நிபுணத்துவம் வாய்ந்த பந்து வீச்சாளர்களை சமாளித்து இந்த சாதனையை படைத்துள்ளார்.

260 பந்துகளில் 137 ஓட்டங்களை எடுத்த அவர், ஆஸி. அணி 416 ஓட்டங்களை பெற்று வலுவாக காரண மாக இருந்தார். சதம் அடித்த மகிழ்ச்சியை கொண்டாடி தீர்த்தார் கவாஜா. இந்தக் கொண்டாட்டம் அவரின் மறுக்கப்பட்ட வாய்ப்புகளுக்கான கொண்டாட்டமாகவே அமைந்தது.

# இதுவும் வெற்றிதான்

ஆஷஷ் தொடரின் நான்காவது டெஸ்ட் போட்டி சிட்னியில் பரபரப்பாக நடந்து வருகிறது.

எந்தத் திருப்பமுமின்றி வழக்கம்போல இங்கிலாந்து சொதப்பிக் கொண்டிருந்த நிலையில் ஓர் அதிரடி சதத்தை அடித்து அசத்தியிருக்கிறார் ஜொனி பெயர்ஸ்ரோ. அவரின் சதம் மற்றும் ஸ்ரோக்ஸின் அரைச்சதம் காரணமாக இங்கிலாந்து அணி கொஞ்சம் கொஞ்சமாக சரிவிலிருந்து மீள்கிறது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இதுவரை சந்தித்திடாத வீழ்ச்சியை இங்கிலாந்து அணி இப்போது அடைந்திருக்கிறது. தொடர்ச்சியான சொதப்பல்கள். உள்ளூர் மற்றும் வெளியூர் என எல்லா இடத்திலுமே அடி வாங்கிவிட்டே ஆஷஷுக்காக அவுஸ்திரேலியாவிற்கு பறந்திருந்தனர். அங்கே இன்னும் உக்கிரமாக ஈவிரக்கமின்றி பன்னிரெண்டே நாட்களில் ஆஷஷை வென்று நிஜமாகவே இங்கிலாந்து அணியை சாம்பலாக்கும் முயற்சியில் ஆஸி. இறங்கியிருந்தது.



தொடரை மோசமான முறையில் இழந்தாயிற்று. தொடரை முழுமையாக இழப்பதை யாவது தவிர்க்க வேண்டும் என்கிற மனநிலையிலேயே இங்கிலாந்து அணி சிட்னியில் கால்பதித்தது. ஆனால், அவுஸ்திரேலிய அணி இன்னும் சாந்தமாகவில்லை. முதல் இனிங்ஸில் மட்டும் 416 ஓட்டங்களை அடித்து வெளுத்தது. இங்கிலாந்து தனது முதல் இனிங்ஸை தொடங்கியது. வேறென்ன? வழக்கம்போல சொதப்பல்தான்.

14 ஆவது ஓவரிலிருந்து 25 வது ஓவரின் 4ஆவது பந்து முடிய அத்தனை பந்துகளையும் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் ஓட்டம் எதையும் வழங்கவில்லை. மொத்தம் 11.4 ஓவர்கள். 70 பந்துகள். இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் என்ன நடக்கிறதென்றே தெரியாமல் திக்கற்று போய் விக்கெட்டை விட்டனர். கடந்த ஆண்டில் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களை அடித்திருந்த ஜோ ரூட் இந்த 2022ஆம் ஆண்டின் முதல் இனிங்ஸிலேயே டக் அவுட் ஆனார்.

அணியை சரிவிலிருந்து மீட்பதற்காக மட்டுமல்ல. அணியின் கௌரவத்தை காக்க, குனிந்த தலை நிமிராமல் பெயர்ஸ்ரோவும் ஸ்ரோக்ஸூம் ஆஸிக்கு கொஞ்சமேனும் சவால் கொடுக்க இருவரும் கரம் கோர்த்தனர். கொஞ்ச நேரத்திற்கு இருவருமே சௌகரியமாக ஆடியிருக்கவில்லை. தடுப்பாட்டத்தையே ஆடிக்கொண்டிருந்தனர்.

எனினும், பின்னர் இருவரும் அதிரடி காட்ட ஆரம்பித்தனர். ஸ்ரோக்ஸ் வேகமாக முன்னேறி அரைசதத்தை கடந்தார். ஸ்ரோக்ஸின் இந்த அரைச்சதம் இங்கிலாந்துக்கு கொஞ்சம் நம்பிக்கையை கொடுத்தது. ஸ்ரோக்ஸூம் பெயர்ஸ்ரோவும் இணைந்து இதற்கு முன்னர் சில தரமான சம்பவங்களை செய்திருக்கின்றனர்.

ஸ்ரோக்ஸ் ஆட்டமிழந்த பின்னரும் அதிரடி காட்டினார் பெயரஸ்ரோ. நதன் லியோனை குறிவைத்து அதிரடி காட்டினார். அவர் அடித்திருக்கும் 103 ஓட்டங்களில் நதனின் பந்தில் மட்டும் 45 ஓட்டங்களை அடித்திருந்தார்.

இந்த தொடர் முழுவதுமே இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவின் ஆதிக்கத்தால் தடுமாறிப்போயிருந்தது. எந்த கணத்திலுமே போராட்டத்தை வெளிக்காட்டாமல் சொதப்பிக் கொண்டே இருந்தது. இரண்டாவது டெஸ்டின் போது பட்லர் கொஞ்சம் நின்று போராடியிருந் தார். ஆனாலும், அதுவும் முழுக்க முழுக்க சமநிலைக்காக ஆடப்பட்ட தடுப்பாட்டமே. அவுஸ்திரேலியாவின் ஆதிக்கத்தை உடைக்கும் வகையில் எங்கேயுமே இங்கிலாந்து திருப்பி அடித்திருக்கவில்லை. ஆனால், நேற்று முன்தினம் ஸ்ரோக்ஸ/ம் பெயர்ஸ்ரோவும் அதை செய்திருந்த னர். அவுஸ்திரேலியாவை திருப்பி அடித்திருக் கின்றனர். இந்த ஆஷஷைப் பொறுத்தவரைக்கும் இங்கிலாந்திற்கு இதுவே பெரிய வெற்றிதான்.

# அம்பை: தனித்த பெண்ணியக் குரல்

**அம்பையை வாசித்தல் என்பது பெண்ணை இன்னும் நுணுக்கமாக, நெருக்கமாக உணர்ந்து, பாலினச் சமத்துவத்தை நோக்கி நம்மை நாமே அழைத்துச் செல்வதற்கான செயல்பாடு. அவை கதைகள் மட்டுமே அல்ல; காலத்தை தாங்கி நிற்கும் வரலாற்றுப் பதிவுகளும்தாம்!**



**பிருந்தா சீனிவாசன்**

அம்பை எழுதிய 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' சிறுகதைத் தொகுப்புக்காக 2021 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழில் இந்த விருதைப் பெறும் நான்காவது பெண் இவர். பொதுவாக அங்கீகாரம் குறித்தோ பேட்டிகள், விருதுகள் குறித்தோ கவலைப்படாதவர் அம்பை.

அம்பைக்கு முன்னும் பின்னும் பெண்கள் பலர் எழுதாமல் இல்லை. ஆனால், அம்பை எல்லாவற்றிலுமிருந்து விலகித் தனித்துவப் பாதையைத் தேர்ந்துகொண்டவர். பெண்களைப் பற்றியும் குடும்பத்துக்குள் பெண்களின் இருப்புப் பற்றியும் சிலர் எழுதிக் கடந்த நிலையில் அம்பையும் அதைத்தான் கைகொண்டார். ஆனால், பார்வை வேறு கோணம் வேறு. சமூகக் கருத்துகள் நிறைந்த எழுத்து என்கிற முத்திரை எதையும் அவர் எழுத்துகள் அடிக்கோடிட்டுக் காட்டவோ கோரவோ இல்லை. ஆனால், கதைக்குள்ளும் அதைக் கட்டமைக்கும் சொற்களுக்குள்ளும் அந்த வித்தையை நேர்த்தியாகச் செயல்படுத்தினார்.

அறுபதுகளின் பின்பகுதியில் பெண்களுக்குப் பளீரென்ற விடியல் வாய்த்துவிடவில்லை. சமையல் குறிப்புகளை எழுதுவதும் குடும்பச் சித்திரங்களை வாசிப்பதும் பெரும் சாதனையாகக் கருதப்பட வேண்டிய சூழலில்தான் சி.எஸ். லஷ்மி, அம்பையாக மாறிய வெளிப்பாடு நிகழ்ந்தது. குடும்பச் சித்திரங்களுக்குள் புதைந்திருந்த பிற்போக்குத்தனத்தைச் சுட்டிக்காட்டியவர்களும் அதில் மீறலை நிகழ்த்தியவர்களும் உண்டுதான் என்கிறபோதும் நவீன இலக்கியத்தில் அம்பை நிகழ்த்திய உடைப்பு முக்கியமானது.

## சிறகுகளுக்கு என்ன வேலை?

பெண்ணின் அறிவை, தெளிவை, அவை புறக்கணிக்கப்படும் பேதமையை எளிமையாகவும் எள்ளலோடும் சொன்னார் அம்பை. தன்னைப் பற்றிப் பெண் வரைகிற சித்திரம் அனைத்தும் பெண்ணியப் படைப்பு ஆகிவிடாது. நுண்ணுணர்வும் அரசியல் தெளிவும் கைகூடிவருபவையே காலத்தைத் தாண்டி நிற்கும். அந்த வகையில் பீறிட்டுப் பாய்ந்த பெண்ணிய எழுத்துக்கு அம்பையே முன்னோடி.

கணவன், மனைவி உறவுக்குள் மனைவி என்பவள் கணவன் கையாளக் கிடைத்த பொருளாகவே இருப்பதை 1972இல் வெளியான இவரது 'சிறகுகள் முறியும்...' சிறுகதை உணர்த்தியது. தோற்றப் பொருத்தம் இல்லை என்கிற அம்மாவின் கருத்தைப் புறந்தள்ளி உடல் பருத்த பாஸ்கரனை மணந்துகொண்டாள் சாயா. தமிழ்த் திரைப்படக் கதாநாயகனாக அவனை வரித்துக்கொண்டு கனவுகள் கண்டவளை, திருமணம் வேறொரு உலகத்துக்கு அழைத்துச் சென்றது. அவள் கனவில் கண்ட பாஸ்கரன் அல்ல அவன். இப்போது தமிழ்ப் படக் கதாநாயகன் செத்துத் தொலையட்டும் பாவி, வாழ்ந்து என்ன ஆகப்போகிறது என்கிற மனநிலைக்கு வந்துவிட்டாள். 'ஆண்கள் உடம்பெல்லாம் வயிறாக, மார்புச் சதை தொங்க ஊதக் கூடாது, மென்மையே இல்லாத ஆண்களுக்குக் குழந்தையே பிறக்கக் கூடாது என்று கட்டாய வாஸக்டமி செய்துவிட வேண்டும்' என்று மனத்துக்குள் ஆயிரமாயிரம் சட்டங்களை இயற்றுகிறாள். கட்டுகள் ஏதுமின்றி நிச்சலமான அமைதியில் சிறகுகள் அசைய வேண்டும் என நினைக்கிறாள் சாயா.

இந்தியாவின் பெரும்பான்மையான இந்துப் பெண்களின் நிலை என்னவோ அதுதான் சாயாவின் நிலையும். அம்பை இந்தக் கதையை எழுதி நாற்பது ஆண்டுகள் ஆன பின்னும் பெரிதாக எந்த மாற்றமும் நிகழ்ந்துவிடவில்லை. வாழ்க்கை நவீனப்பட்டிருக்கிறதே தவிர குடும்ப அமைப்புக்குள் பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் புதுப்புது வடிவம் எடுத்திருக்கின்றன.

## கற்களும் முட்களும் சூழ்ந்த பாதை

தமிழகம் தாண்டி வெவ்வேறு நிலத்தின் வாழ்க்கையை, மனிதர்களை, அங்கே நிலவும் அரசியலைக் கதைகளின் வழியாகப் பதிவுசெய்தவர் அம்பை. மனிதர்களும் சூழலும் மாறுகின்றனவே ஒழிய பெண்ணின் மீது திணிக்கப்படும் நிர்ப்பந்தங்களிலும் கற்பிதங்களிலும் பெரிதாக எந்த மாற்றமும் இல்லை என்பதையும் அவரது கதைகளில் நாம் உணரலாம். ஆய்வுப் படிப்புக்குத் தயாராகிற பெண்கள் பேராசிரியர்களால் நடத்தப்படுகிற விதத்துக்கு 'த்ரிசங்கு' அஞ்சனாவும் சாட்சி. இப்போது வாசிக்கும்போது 'சூமீடூ' நினைவுக்கு வருகிறது.

அப்பாவின் செயலால் ஏற்பட்ட அவமானம் உடலெங்கும் புழுக்களாக நெளிய, கல்வியின் மூலம் அனைத்தையும் கடக்க நினைக்கிறாள் அஞ்சனா. அச்சமும் தாழ்வு மனப்பான்மையும் வதைத்தெடுக்க, பக்கத்தில் இருக்கும் மாணவனிடம் சிகரெட்டைப் பற்றவைத்துப் புகையை ஊதுகிற பெண்களின் தன்னம்பிக்கையில் அதிர்ந்து போகிற அஞ்சனா, இன்றைக் கும் உயர் கல்வி என்பது கனவாக நிலைத்துவிடுகிற பெண்களை நினைவூட்டுகிறாள். ஹிதாவும் ஆராய்ச்சி மாணவிதான். கௌதமனோடு சேர்ந்து வாழ்கிறாள். ஹிதாவுக்குப் புரட்சி மேல், அதனுள் ஒளிந்திருக்கும் போலித்தன்மையின் மேல் விமர்சனம் உண்டு (சக்கர நாற்காலி). பெண்ணின் அறிவை அவ்வளவு எளிதாக இந்தச் சமூகம் அறிவென்று ஏற்றுக்கொள்ளாது. அசட்டுக் களை என்றே பட்டம் சூட்டும் என்றாலும் ஹிதாவைப் போன்ற விதிவிலக்குகள் ஜெயிக்கிறார்கள் என்று முடிக்கிறார் அம்பை. ஆனால், அந்த நிலையைக் கடந்துவர அவர்கள் எவ்வளவு கற்களை அகற்றி, முட்களை விலக்க வேண்டியுள்ளது என்பதையும் சேர்த்துதான் அம்பை எழுதுகிறார்.

## சமையலறை என்னும் சிறை

நாற்பது வருடங்களாகத் தோசை சுட்டுக்கொண்டிருக்கும் அண்ணிக்கு (வெளிப்பாடு), தான் அதுவரை சுட்ட தோசைகளின் எண்ணிக்கை இரண்டு லட்சத்தைத் தாண்டும் என்று தெரியாது. அது தெரிந்திருந்தால் எந்நேரமும் இட்லி, வடை, அப்பம், பொரியல், குழம்பு என்று அடுக்களைக்குள்தான் தன் ராஜ்ஜியம் என்று கோலோச்சி மகிழ்ந்திருக்க மாட்டாள். "பொம்பளைக பத்தி எளுத என்ன இருக்கு?" என்று வெள்ளந்தியாகக் கேட்டிருக்க மாட்டாள். "புள்ள பெறுதோம். ஆக்கிப் போடுதோம். இதுக்கு நடுவுல ரோசிச்சோம் போங்க" என்று சொல்லிவிட்டு மௌனமாகச் சாப்பிட்டிருக்க மாட்டாள். சமையலறை தாண்டி வெளியுலகம் அறியாத இருபது வயது சந்திராவுக்குத் திருமணம் ஆனதும், 'தெருல நடக்குணும், தெனம் ஒட்டல்ல பலகாரம் சாப்பிடணும், கடைக்குப் போய் நானே பொடவை எடுக்கணும், சினிமா போகணும், நெறைய ஊர் பாக்கணும்' என்று சின்ன சின்ன ஆசைகள். ஆனால், கைநீட்டாத கணவன் வாய்க்க வேண்டுமே என்கிற பதற்றத்தை நமக்குக் கடத்திவிடுகிறார் அம்பை.

டெல்லியிலிருந்து திருநெல்வேலிக்குத் தனியாக பயணம் செய்கிறவளுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு, அடக்குமுறைதானே. 'என் கரிசனத்தைப் பார். எவ்வளவு அக்கறை பார் எனக்கு' என்கிற கவனிப்பு இம்சைதானே. பெண்ணால் முடியாது என்று திரும்ப திரும்ப நிரூபிக்கிற எத்தனம்தானே. பெரும் நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் பெண்கள் அமர்ந்துவிட்டார்கள் என்பதற்காகப் பெண்ணுக்கு விடிந்துவிட்டது என்று பொருள் இல்லை. சமையலறை இல்லாத வீடு ஏது? அதைத்தான் அம்பை தன் கதைகளின் மூலமாக நுட்பமாகப் பதிவுசெய்கிறார்.

## உடல் மீது ஏற்றப்படும் சுமை

ஆணுக்கு உடல் என்பது உடல் மட்டுமே. பெண்ணுக்கு அது பெருஞ்சுமை என நினைக்க வைக்கிறது இந்தச் சமூகம். அம்பையின் 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' எக்காலத்துக்குமான கதை. எப்போதும் தண்ணீர் ஊறியிருக்கும் சமையலறையிலிருந்து சற்றே ஆசுவாசம் பெறும் எண்ணத்தில் மலையைப் பார்க்க நினைத்தால் துணி மறைக்கிறது என்கிறாள் மருமகள். உடனே ஒன்றுக்கு இரண்டு கொடிகளில் துணி உலர்த்தப்படுகிறது. குடும்பத்துடன் ஏரிக்குப் போவதற்காக மருமகள்கள் அதிகாலையில் எழுந்து சமைத்து, வியர்வை மழையில் ரவிக்கை ஒட்டிக்கொண்டு எண்ணெய்ப் புகை கண்ணில் படிய, முழுத் தூக்கம் இல்லாமல் கனம் ஏறிய இமைகளோடு இருக்க, மாமனாரோ, "ஏரிக்குப் போகலாம் என்றதுமே உற்சாகம் பொத்துக்கொண்டுவிடுமே உங்களுக்கு?" என்கிறார். ஆண், பெண்ணைப் புரிந்துகொள்வது இந்த லட்சணத்தில்தான். ஆண்கள் ஏரியை ரசிக்க, பெண்களோ பக்கோடாவும் பஜ்ஜியும் பொரித்துத் தள்ளினார்கள். எவ்வளவு பெரும்பேறு என்று அம்பை எழுதுகையில் அவமானமும் குற்றவுணர்வும் ஏற்படாத மனங்களில் ஆணாதிக்கம் குடிகொண்டிருக்கிறது எனப் பொருள்.


## வரலாற்று ஆவணம்

வன்முறை என்பது அடித்து நொறுக்குவது மட்டுமே என்று ஒற்றைத் தன்மையுடன் புரிந்துகொண்டிருந்த மனங்களில், நுட்பமான வன்முறையின் வடிவங்களைத் தெளிவுபடுத்தினார் அம்பை. காலந்தோறும் பெண்கள் அடைந்திருக்கும் மாற்றங்களைச் சொல்லிக்கொண்டு அவர்கள் மீதான வன்முறைகளையும் அடக்குமுறைகளையும் பதிவுசெய்தார். வன்முறையை ஆண்தான் நிகழ்த்த வேண்டும் என்பதில்லை பெண்ணின் வழியாகச் செயல்படுத்தப்படும் வன்முறையையும் அவர் சுட்டிக் காட்டினார். குடும்ப அமைப்புக்குள் குழந்தைகள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறையைக் கவனப்படுத்தும் விதத்தில் அம்பை எழுதிய 'மைமல் பொழுது' (அந்தேரி மேம்பாலத்தில் ஒரு சந்திப்பு) குடும்ப கௌரவத்தின் பெயரால் நாம் இழைக்கிற அநீதியைக் கவனப்படுத்தியது. மூப்பின் காரணமாக ஒருவரைப் புறக்கணிப்பதும் கைவிடுவதும் வன்முறைதான் என்பதையும் சுட்டிக் காட்ட அம்பை தவறவில்லை. பெண்ணின் உடல் மீது ஏற்றிவைக்கப்பட்டிருக்கும் சுமைகளைப் புனைவாக மட்டுமல்லாமல், கட்டுரைகளாகவும் பதிவுசெய்திருக்கிறார் (உடலெனும் வெளி).

பெண்களின் வரலாற்றைப் பதிவுசெய்யும் நோக்கில் 'ஸ்பாரோ' (SPARROW-Sound and Pictures Archives for Research on Women) என்கிற பெண்கள் ஆவணக் காப்பகத்தை நிறுவி, அதன் இயக்குநராகவும் செயல்பட்டு வருகிறார் அம்பை. குரல் நெரிக்கப்பட்டு, ஒதுக்கி வைக்கப்பட்ட பெண்களின் அனுபவங்களுக்கு குரலும் மொழியும் அளித்து அவர்களின் வரலாற்றை ஆவணப்படுத்துவது இந்த அமைப்பின் முக்கியப் பணி. இந்த அமைப்பின் சார்பில் படைப்பாளிகளுக்கு விருதும் வழங்கப்படுகிறது.

அம்பையை வாசித்தல் என்பதும் பெண்ணை இன்னும் நுணுக்கமாக, நெருக்கமாக உணர்ந்து பாலினச் சமத்துவத்தை நோக்கி நம்மை நாமே அழைத்துச் செல்வதற்கான செயல்பாடு. அவை கதைகள் மட்டுமே அல்ல; காலத்தைத் தாங்கி நிற்கும் வரலாற்றுப் பதிவுகளும் தாம்!

வவுனியூர் இரா. உதயணன்



# யுவதிகளே உங்களுக்கு....

இனிமையான மாலைப் பொழுது. பகலவன மெல்ல தூங்கச்செல்ல நேரம் பத்து மணிக்கு மேலாகிவிடும். ஆனால் விடியற்காலை ஐந்து மணிக்கே சாரளத்தினூடாக பளிச் சென்று எட்டிப் பார்ப்பான்.

தாரகை கோலில் அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தாள். கோடை காலமாதலால் இன்னும் பகவான் உறக்கத்துக்குப் போகவில்லை. தாரகையோ வேலை முடிந்து ஆறு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துவிடுவாள். ரமேஸ் வரத்தான் சற்றுப் பிந்தும். ஆனால் இன்று எட்டு மணியாகியும் இன்னமும் ரமேசையும் காணவில்லை. மகள் ஆராத்தியும் வீடு வந்து சேரவில்லை.

வேலை முடிந்துவந்து உடுப்பை மாற்றி அவசரஅவசரமாக சமைத்துவிட்டு புருசனுக்கும் மகளுக்கும் மேசையில் இரவு உணவை எடுத்து வைத்துவிட்டு இருவரதும் வரவை எதிர்பார்த்து நின்ற தாரகைக்கு கோபம் கோபமாக வந்தது. தாரகைக்கு பசியும் ஒருபுறம் வாட்ட எல்லோருடனும் சேர்ந்து சாப்பிட லாம் என்று நினைத்திருக்க இருவரும் இன்னமும் வராதது மேலும் கோபத்தைக் கூட்டியது.

செல்போனை எடுத்து ரமேசிடம் கேட்பம் என்று டைனிங் ரூமிற்குள் போக மேசையின் மேல் ஒரு புத்தகம் இருந்தது. முகநூலால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும் பற்றிய புத்தகம்தான் அது. செல்போனை எடுத்து ரமேசை கூப்பிடுவதை நிறுத்திவிட்டு அந்தப் புத்தகங்களின் பக்கங்களை புரட்டத் தொடங்கினாள் தாரகை.

வாசிக்க வாசிக்க அவளின் கவனம் புத்தகத்தில் திரும்பியது. முகநூலால் நன்மைகள் பல இருந்தாலும் தீமைகள் அதிகமாக இருப்பதாகவே உணர்ந்தாள் தாரகை.

ஒருவித பயம் அவளை ஆட்கொள்ளத் தொடங்கியது.

ஆராத்தி பிரத்தியோக பாடசாலையில் உயர்தர வகுப்பு படிக்கும் மாணவி. பாடசாலை முடித்து வீட்டுக்கு வந்துவிட்டு திரும்பவும் ரியூசனுக்கு போய் ஏழரை எட்டு மணியளவில்தான் அவள் வீடு திரும்புவது வழக்கம். சிலவேளைகளில் ரமேஸ் வேலை முடித்து வரும்போது அவருடன் சேர்ந்து வருவாள்.

அவளை எப்படியாவது ஒரு டாக்டராக்கிவிட வேண்டும் என்பதுதான் தாரகையின் கனவு. ஆனால் ரமேஸ் எல்லாவற்றை யும் சுலபமாக எடுத்துக்கொள்பவன்.

அவள் விரும்பிய படிப்பையே படிக்கட்டும். அப்பதான் அவள் செய் யும் வேலையிலும் ஓர் ஆர்வம் இருக் கும்.

எங்கட சனம் டாக்டர், என்ஜினியர், அக்கவுண்டன்ட், லோயர் போன்ற தொழில்கள்தான் உயர்ந்த மதிப்புக்குரிய தொழில்கள் எண்டு நினைச்சுக்கொண்டு குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டிக்கொண்டு இருக்கு.

இவற்றைவிட எத்தனையோ ஆர்வமும் உயர்ந்த சம்பளமும்கொண்ட புதுப்புது தொழில்கள் ஆராத்தி போன்ற இளைய சமுதாயத்தினருக்கு இருக்கு. இண்டைக்கு கூகுள் கம்பனியின் முக்கிய அதிகாரி ஒரு இந்தியத் தமிழன். அந்த சுந்தர்பிச்சையை உலகில் உள்ள எல்லாத் தமிழருக்கும் தெரியும். ஒரு டாக்டராகவோ எஞ்ஜினியராகவோ வந்தால் குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் உள்ள சிலருக்குத்தான் தெரியும். எனவே அவள் விருப்பப்படியே அவள் விரும்பியதை படிக்கட்டும்.

ரமேஸ் சொன்னவற்றையெல்லாம் தாரகை நினைத்துப் பார்த்தாலா இருந்தும் முகநூல் பற்றிய கட்டுரைகள் அவளை சிந்திக்க வைத்தது.

இவள் ஆராத்தி இரவு பன்னிரெண்டு மணிவரைக்கும் அறையைச் சாத்திவிட்டு படிக்கிறன் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறாளே. உண்மையிலேயே இவள் படிக்கிறாளா அல்லது வேற ஏதும் செய்யிறாளா என்ற ஒரு சந்தேகம் தாரகையின் மனதில் எழத் தொடங்கியது.

என்ர ஒரே பிள்ளை தப்புச்செய்ய மாட்டாள் என்று நினைத்தவளாய் கைத்தொலைபேசியை எடுத்து ஆராத்திக்கு போன் பண்ணினாள்.

“அப்பாவோட காரில வந்துகொண்டிருக்கிறன் அம்மா”என்று பதில் வந்தது.

ஏனோ தாரகையின் மனது நிலையற்று பலவற்றையும் நினைத்து தவித்துக்கொண்டிருந்தது.

கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு யன்னலினூடாக எட்டிப் பார்த்தாள். ரமேஸ் காரை விட்டிறங்க ஆராத்தியும் தோற்பையை முதுகில் சுமந்தவண்ணம் காரை விட்டு இறங்கினாள்.

இன்னமும் பகலவன் வெளிச்சத்தை பரப்பியிருந்தான். தாரகை ஓடிச்சென்று முன் கதவைத் திறந்தாள்.

“என்ன இண்டைக்கு வழமையை விட பிந்தி வாறியள்”

இந்த நாட்டுக்கு வந்து இருபது வருசங்களாச்சு. என்ன செய்யிறது கஸ்டப்பட்டு வேலை செய்துதானே ஆக வேணும். “இன்னும் கொஞ்ச நேரம் வேலை செய்ய முடியுமா, அவசர வேலை இருக்கு எண்டு என்ர உயர் அதிகாரி கேட்டால் இல்ல எண்டு சொல்லிப்போட்டு வர முடியுமே.”

ஆராத்தி தகப்பனை முந்திக்கொண்டு உள்ளே நடந்தாள்.

தாரகையும், ரமேஸ் கூட்டி வந்துவிட்டார்தானே என்று ஒரு கேள்வியும் கேட்கேல்ல.

“அம்மா பசிக்குது” என்று ஆராத்தி சொல்ல போய் கெதியில குளிச்சுப்போட்டு வாங்கோ என்று கட்டளையிட்டாள் தாரகை.

இருவரும் தங்கள் தங்கள் அறைக்குச் சென்று குளித்து ஆடைகளை மாற்றிவிட்டு கீழே வந்தார்கள்.

மூவருமாக மேசையில் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

“இப்பவெல்லாம் இந்த முகநூல், வாட்ஸ்அப் பாவிக்கிற சனங்கள் கூடிப்போச்சு. அதில செலவழிக்கிற நேரத்தை வேற ஏதாவது நல்ல விசயங்களுக்கு செலவழிக்கலாம்.”

தூரகை சொன்னதை இருவரும் காதில் போட்டதாகத் தெரியவில்லை.

ரமேசும் ஆராத்தியும் சாப்பிடுவதில் கவனம் செலுத்துவது போல பாசாங்கு செய்தார்கள்.

“நீங்கள் நான் சொன்னதைப் பற்றி என்ன நினைக்கிறியள் அப்பா” தாரகை ரமேசைப் பார்த்துக் கேட்டாள்.

“எதைப்பற்றி கேட்கிறாய்” ரமேசின் கேள்வி தாரகைக்கு கோபத்தை உண்டு பண்ண “ஒன்றுமில்ல” குனிந்துகொண்டாள். நேரம் இரவு பத்தைத் தாண்டியிருந் தது. எல்லோரும் படுக்கைக்குச் சென் றார்கள்.

தாரகை தனது அறையில் அமர்ந்திருந்து சீரியல் பார்க்கத் தொடங்கினாள். அவள் வழமையாக பதினொரு மணிக்குப் பிறகுதான் படுப்பாள்.

ரமேஸ் இன்னும் கொஞ்சம் வேலை இருக்கு, முடிச்சுப்போட்டு படுக்க வாறன் என்று சொல்லிவிட்டு ஆபிஸ் அறைக்குச் சென்றான்.

ஒவ்வொரு நாளும் இரவு வீட்டுக்கு வந்த பின்பும் ஒரு மணி நேரமாவது அலுவலக வேலையை கம்பியூட்டரில் செய்வது வழமைதானே என்று மனதிற்குள் நினைத்த தாரகை வேலையை முடிச்சிட்டு கெதியில வாங்கோ என்று சொன்னாள்.

தாரகையின் கவனம் T.V யின் பக்கம் திரும்பியது.

ஆபிஸ் அறைக்குச் சென்ற ரமேஸ் கம்பியூட்டரை ஆன் பண்ணினான். பின்பு முகநூல் பக்கம் போனான். அங்கே ஒவ்வொன்றாகப் பார்த்துவிட்டு வழமையாக பேசும் (chat) பெண்ணுடன் முகநூலில் பேசத் தொடங்கினான். ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு மேலாக இருவரும் பேசி வந்தார்கள். எத்தனையோ அந்தரங்கப் பேச்சுக்கள். ஒருவரையொருவர் விரும்புகின்ற அளவுக்கு பேசிவிட்டார்கள். இன்றுதான் முதன்முறையாக பேசும் கமராவில் ஒருவரை ஒருவர் பார்க்கப் போகிறார் கள். முகநூல் பக்கத்தில் இருவரும் தங்கள் படங்களைப் போட்டுவைக்க வில்லை. அத்தோடு பிரத்தியேக படங்களும் முகநூலில் இருக்க வில்லை.

ஆராத்திக்கு ஒரு பக் கம் தன்னோடு வழமையாக எல்லாம் பேசும் அந்த இளைஞனைப் பார்க்க மிகவும் ஆவலாக இருந்தது. மறுபக்கம் டென்சனாகவும் இருந்தது. எழும்பிச் சென்று கதவு பூட்டப்பட்டு இருக்கிறதா என்று ஒருமுறை பார்த்துக்கொண்டாள்.

முகநூலைத் திறந்து பேசும் பக்கம் போய் அந்த இளைஞனின் பெயரை கிளிக் பண்ணினாள். அந்த இளைஞ னின் பேசும் பக்கத்தில் கமராவினூடாக அந்த இளைஞன் தோன்றினான்.

அவனைப் பார்த்ததும் சில கணங்கள் அவளது கண்களை அவளாலேயே நம்பமுடியவில்லை. இவ்வளவு நாட்களும் இவருடனா பேசினனான். அதிர்ந்து போனவள். “அப்பா நீங்களா” என்று கத்தினாள். கதறி அழுதாள். கம்பியூட்டரை ஆப் பண்ணினாள்.

தகப்பனின் வேலையறைக்குள் ஓடினாள். ரமேசும் திகைப்புடன் கம்யூட்டரை ஆப் பண்ணாமல் அப்படியே அமர்ந்திருந்தான்.

அப்பா நீங்களா இப்படி? எத்தனை நாட்களாக என்னைப் போன்ற இளம் பெண்பிள்ளைகளோட... உண்மையைச் சொல்லுங்கோ அப்பா.... ஆராத்தி கதறினாள்.

சத்தியமாக உன்னோடதான் இப்படி பேசினனான். வேற யாரோடையும் இல்ல. ஒரு கோழையாய் தகப்பன் என்ற ஸ்தானத்திற்கு பொருத்தமற்றவனாக அமர்ந்திருந்தான் ரமேஸ்.

உங்களைப் போல எத்தனை வயது போனவர்கள் இளம் பெண்பிள்ளைகளை ஏமாற்றினமோ தெரியாது. சொல்லிக்கொண்டே தனது அறையை நோக்கி ஓடினாள் ஆராத்தி.

இனி எப்படி ஒரு தகப்பனாக சொந்த மகளின் முகத்தில் முழிப்பது என்று நினைக்கும் போது பைத்தியமே பிடித்துவிடும் போல் இருந்தது ரமேசுக்கு.

தூரகை மிகவும் சுவார்சியமான சீரியல் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஆனால் இங்கே முகநூலால் அதுவும் பொய்ப்பெயரில் ஏமாற்றப்பட்ட ஒருத்தியாய் கட்டிலில் அமர்ந்து அழுது கொண்டிருந்தாள் ஆராத்தி.

முகநூலிலும் நிறையவே ஏமாற்றங்களும் நடந்துகொண்டுதான் இருகின்றது.

வேலையறை மின்சார சுவீட்சை ஆப் பண்ணிவிட்டு மௌனமாக அழுதபடியே தாரகையின் அறையை நோக்கி நடந்தான் ரமேஸ். நாளை என்ன நடக்குமோ என்று நினைக்க அவனுக்கு தலையே சுற்றியது. தொப்பென்று கட்டிலில் வீழ்ந்தான். விடியலே வராவிட்டால் எவ்வளவு நல்லது என்று நினைத்தவன் மௌனமாகவே இரவு முழுவதும் தனக்குள்ளே அழுதவண்ணம் கண்விழித்திருந்தான்.

# வளம்மிகு மண்டூர் நூல் வெளியீட்டு நிகழ்வு





சிரேஸ்ட ஊடகவியலாளர் இ.பாக்கியராசாவின் வளம்மிகு மண்டூர் நூல் வெளியீட்டு நிகழ்வானது கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வெளியீடாக கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கல்லடியிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக, சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் செ.யோகராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷ்ஜானந்தா மஹராஜ் ஆன்மீக அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய நிபுணர் வே.விவேகானந்தராசா பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனும் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் செல்வி. இ.இராகுலநாயகி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் இந்நிகழ்வில் வைத்தியர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், என பலதரப்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

# 13 தங்கம் வென்ற தர்ஷிக்காவை கௌரவித்த தென்கிழக்குப் பல்கலை சமூகம்




13 தங்கப் பதக்கங்களை பெற்று கொழும்புப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் சாதனை படைத்த அக்கரைப்பற்றினைச் சேர்ந்த மருத்துவ மாணவி தணிகாசலம் தர்ஷிகாவினை கௌரவிக்கும் நிகழ்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் அலுவலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

பல்கலைக்கழக உபவேந்தரின் அழைப்பின்பேரில் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்திருந்த சாதனை மாணவி தர்ஷிகாவுக்கு பல்கலைக்கழக நிருவாகம் பொன்னாடை போர்த்திக் கௌரவமளித்தது. இதன்போது தர்ஷிக்காவுக்கான நினைவுச் சின்னத்தினை உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் வழங்கி வைத்தார்.

சாதனை மாணவி தர்ஷிக்கா அவரைக் கௌரவித்த பல்கலைக்கழக உபவேந்தருக்கு நன்றி கூறியதுடன் தனது சாதனை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். தமது குடும்பம், ஆசிரியர்கள், நல்ல நண்பர்கள், விடா முயற்சி என்பன தனது சாதனைக்கு வித்திட்டதனையும் அவர் நினைவுகூர்ந்தார்.

இந்நிகழ்வானது பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் தலைமையில் இடம்பெற்றதுடன் இந்நிகழ்வில் பதிவாளர் உட்பட பல்கலைக்கழக உயர் அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர்.

# பேராசிரியர் க.கைலாசபதியின் 39 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம்

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் 39 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. இராசநாயகம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் தொடக்கவுரையினை ஆசிரியர் த. சிறிபிரகாஸ் அவர்களும் விசேட உரைகளை இ.சத்தியமலர், ச.சஸீலன், இ. கார்த்திகாஜினி, கா. சிந்துஜா, ச. கோபிகா, சி. தனுராஜ், சு. விஸ்ணுசாந்தினி, பா. கஜீபா, வ. கிந்துஜா, நா. கபிலன் ஆகியோரும் நிறைவுரையினைத் தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான க.தணிகாசலம் அவர்களும் ஆற்றினார்கள். சுகாதார வழிகாட்டல்க ளுக்கு அமைவாக இடம்பெற்ற இந் நிகழ்வில் ஆர்வலர்கள் பெருமளவில் கலந்துகொண்டிருந்தனர்.





# திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் விஷேட பிரார்த்தனை




இலங்கைத்திருநாட்டில் வாழும் மக்களும், உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனாவைரஸ் தாக்கத்திலிருந்தும், அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காகவும், நாட்டில் சுபீட்சம் வேண்டியும், இலங்கை வானொலி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனமாக மாற்றம் பெற்று 55 வரு டத்திற்கான சிறப்பு ஹோம பூஜைகள் வழிபாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி புதன்கிழமை விசேட பூசை வழி பாடுகளை ஆலயகுரு சிவ ஸ்ரீ அங்குசநாதக்குருக்கள், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. இன்றைய நிகழ்வில் அம்பாறை மாவட்ட பதில் மாவட்டச்செயலாளர் வே. ஜெகதீஸன், திருக்கோவில் பிரதேசசெயலாளர் ரி. கஜேந்திரன், உதவி பிரதேச செயலாளர் க. சதிசேகரன், ஆலய தலைவர் எஸ். சுரேஸ் ஆலய வண்ணக்கர் வ. ஜெயந்தன், இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி பிரசாத் சர்மிளா மற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். ஏற்பாடுகளை மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டார். - காரைதீவு சகா.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

14. ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலை செல்வது தொடர்பான ஐந்து கருமங்களில் முதற்கருமமும், இறுதிக் கருமமும் தரப்பட்டுள்ளன. இரண்டாம், மூன்றாம், நான்காம் கருமங்களைச் சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

A - நித்திரை விட்டெழுதல்
B - ..............................................................
C - ..............................................................
D - ..............................................................
E - வீட்டிலிருந்து பாடசாலை புறப்படல்

(1) B - உடையணிதல்
C - முகம் கழுவுதல்
D - உணவு உண்ணல்


(2) B - உணவு உண்ணல்
C - முகம் கழுவுதல்
D - உடையணிதல்

(3) B - முகம் கழுவுதல்
C - உடையணிதல்
D - உணவு உண்ணல்

15. பின்வரும் கவிதையின் நான்கு வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை யாது?

A - நெற்பயிர் நன்றாய்ச் செழித்து வளர்ந்தது
B - வயலை உழுது நாற்றுகள் நட்டனர்
C - நற்கதிர் ஈன்று முற்றி விளைந்தது
D - பசளை இட்டு நீரும் பாய்ச்சினர்.

(1) BACD (2) DBAC (3) BDAC


16. 

இந்த உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?


(1) 7
(2) 8
(3) 9

17. வெற்றிடங்கள் இரண்டிலும் இடம்பெற வேண்டிய உருக்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.

A ⟶ ∀ எனின், E ⟶ ..............
T ⟶ ⊥ எனின், H ⟶ ..............




18. முதலில் தரப்பட்ட உருவினை அமைப்பதற்குரிய உருத் துண்டுகள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

19. முதலில் தரப்பட்ட கட்டத்தினுள் உள்ள மூன்று உருத்துண்டுகளையும் ஒன்றுபடச் சேர்த்து அமைக்கக் கூடிய தனி உருவைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

20. முதலில் தரப்பட்ட உருவினைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

21. செவ்வக வடிவமான பலகைத் துண்டு ஒன்றின் உடைந்த பகுதி ஒன்று முதலில் தரப்பட்டுள்ளது. அதன் மறுபகுதியைச் சரியாகக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

## விடைகள்

14. (3)
15. (3) 16. (2) 17. (3) 18. (1) 19. (2) 20. (1) 21. (3)

---

கல்வி tv CHANNEL-1

**09.01.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**09.01.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சலங்கந்தை பகுதியில் தனியார் பஸ் விபத்து



கொழும்பு, ஜன. 09

ஹற்றன், சலங்கந்தை பகுதியில் தனியார் பஸ்ஸொன்று வீதியைவிட்டு பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதியும், நடத்துநரும் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில், சலங்கந்தை பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு அருகாமையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

சலங்கந்தை பஸ் தரிப்பிடத்துக்கு பயணிகளை ஏற்றிச் செல்ல பயணித்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இயந்திரக் கோளாறு காரணமாகவே விபத்து இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது. இவ்விபத்து தொடர்பில் ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இத்தகைய கடினமான காலகட்டம் நாட்டின் வரலாற்றில் வந்ததில்லை

## அமைச்சர் வாசுதேவ கூறுகின்றார்



கொழும்பு, ஜன. 09

**இவ்வாறானதொரு இக்கட்டான காலகட்டம் இந்த நாட்டின் வரலாற்றில் நினைவு கூரப்படவில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

**மாவத்தகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறியதாவது:

இந்த நாட்டின் வரலாற்றில் பிரதமர் என்ற பெயர் அழியாத எழுத்துக்களால் எழுதப்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. மிகவும் வறிய, ஒடுக்கப்பட்ட மக்களைச் சென்றடைந்து, அவர்களின் நலனுக்காக இந்நாட்டில் பல்வேறு சட்டங்களை இயற்றி, இந்த நாட்டின் தேசிய பாரம்பரியத்தையும், தேசிய சுதந்திரத்தையும் பாதுகாத்து, இந்த நாட்டில் தேசிய உணர்வுகளை எழுப்ப எமக்கு வழங்கிய தலைமைத்துவத்துக்கு மேலதிகமாக அவர் தலைமை தாங்கினார். இவை அனைத்திலிருந்தும் அவரது பெயர் பொன் எழுத்துக்களால் எழுதப்பட்ட பெயராக வரலாற்றில் இடம்பெறும்.

இந்த இரண்டு வருடங்கள் இந்த நாட்டில் மிகவும் கடினமான காலம். இத்தகைய கடினமான காலகட்டம் இந்த நாட்டின் வரலாற்றில் நினைவு கூரப்படவில்லை. எனவே இந்த ஆண்டு புதிய பயணத்தை தொடங்கவுள்ளோம்.

இந்த ஆண்டு இந்த நாட்டின் உழைக்கும் மக்களுக்கு, அவர்கள் எதிர்பார்க்கும் நிவாரணத்தையும் அவர்கள் எதிர்பார்க்கும் வெற்றியையும் வழங்க முடியும் என்று நான் நம்புகிறேன்-என்றார்.(அ)

# 206.8 மில்லியன் டொலர் பெறுமதியான தங்கம் மத்திய வங்கியினால் விற்பனை

கொழும்பு, ஜன. 09

206.8 மில்லியன் டொலர் பெறுமதியான தங்கத்தை மத்திய வங்கி விற்பனை செய்துள்ள நிலையில் இலங்கையில் கையிருப்பு தங்கம் 54 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அண்மையில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநரால் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த பின்னணியில் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கம், கடந்த டிசெம்பர் மாத இறுதியில் 3,137.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளது.

நவம்பர் மாத இறுதியில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கம் 1,588.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

அதேநேரம், நவம்பர் மாத இறுதியில், நாட்டின் தங்கத்தின் கையிருப்பின் பெறுமதி 382.2 மில்லியன் டொலராக ஆக காணப்பட்டது.

இந்த நிலையில், கடந்த டிசெம்பர் மாத இறுதியில் தங்கத்தின் கையிருப்பு பெறுமதி 175. 4 மில்லியன் டொலர் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, 206.8 மில்லியன் டொலர் பெறுமதியான தங்கம், மத்திய வங்கியினால் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், தங்கத்தின் கையிருப்பு 54 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்துள்ளதாக மத்திய வங்கியின் புதிய தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது.

# முள்ளியவளை பூதன்வயலில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 09

முல்லைத்தீவு மாவட்டம், முள்ளியவளை - பூதன்வயல் பகுதியில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் சடலம் ஒன்று காணப்படுவது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இவ்வாறு சடலமாக அடையாளம் கணப்பட்டவர் லோக ராசா - ராஜினி (வயது-39) என தெரியவந்துள்ளது.

குறித்த பெண் நான்கு நாட்களுக்கு முன்னதாக காணாமல் போயிருந்தார் என குடும்பத்தினர் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மதவளசிங்கன் குளம் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட பூதன்வயல் பகுதியில் ஆட்களற்ற தென்னந் தோட்டக் காணி கிணறு ஒன்றில் சடலமாக நேற்று சனிக்கிழமை காலை அடையாளம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# சுசிலுக்கு இரவு விருந்து வைத்தார் ராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா

கொழும்பு, ஜன. 09

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள சுசில் பிரேமஜயந்தவுக்கு, இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா, இராப்போசன விருந்து ஒன்றை வழங்கியுள்ளாரென தகவல் வெளியாகியுள்ளது

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இந்த இராப் போசனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது எதிர்கால அரசியல் நகர்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவும், அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# உலக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவு நாளை

யாழ்ப்பாணம், ஜன. 09

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48 ஆவது நினைவு தினம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அந்த மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக யாழ்ப்பாணம், முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் நினைவஞ்சலி நடத்தப்படுவது வழமை.

இதன்போது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரைக் கலந்து கொண்டு அஞ்சலியைச் செலுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் வைபவத்தின்போது பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டில் மின்கம்பி அறுந்ததில் மின்சாரம் தாக்கி 11 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**காளிமாதா ஜோதிட நிலையம்**





**இந்திய பிரபல்யமான பாரம்பரிய**

**கண்ணன் பொதுவாழ்தாஸ்**

ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை
அர்ச்சனா ஜுவலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)
075 217 1943

# மாலைதீவு கடற்பரப்பில் மீன்பிடி படகு கவிழ்ந்தது

## இலங்கையர் ஐவர் மீட்பு, ஒருவர் மாயம்

கொழும்பு, ஜன. 09

மாலைதீவு கடற்பரப்பில் மீன்பிடி படகு ஒன்று கவிழ்ந்ததில் 6 இலங்கையர்கள் நீரில் மூழ்கியுள்ளனர்.

அவர்களுள் ஐவர் காப்பற்றப்பட்டுள்ளனர் எனவும் ஒருவர் நீரில் மூழ்கி காணாமற் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் அவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது. (அ)

## பொருள் தட்டுப்பாடு...

யாழ்.வணிகர் கழகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதத்துக்கு பின்னர்நாட்டில்படிப்படியாக சில பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக அந்தந்த நிறுவனங்கள் விநியோகத்தை மட்டுப்படுத்தியதன் காரணமாக பால்மா, எரிவாயு சிலிண்டர்,

கோதுமை மா என்பவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

எரிவாயு சிலிண்டர்களின் வெடிப்புகள் காரணமாக மீளப்பெறப்பட்டு அவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.60 - 70 வீதமான கோதுமை மா விநியோகம் தற்போது சீராகிவருகிறது.

பாண் மற்றும் பணிஸுக்கு மாத்திரம் போதுமான அளவு கோதுமை மா வெதுப்பகங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. பால்மா விநியோகமும் இந்த மாத இறுதியில் சீரடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நெல்லின் விலை அதிகரித்ததால் உள்ளூர் நாட்டரிசி 160 ரூபா வரை விற்கப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் அரிசி 130 - 140 ரூபா வரையும் கீரிசம்பா 190 - 200 ரூபா வரை விற்கப்படுகின்றது.

உள்ளூர் அரிசிகளின் விலை தைப்பூசத்துக்கு பின்னர் சற்று குறைவடையும் சாத்தியக்கூறுகள் உள்ளன.

15 - 20 ரூபா வரை இந்த விலை இறக்கம் ஏற்படலாம். ஆனால் நெல் உற்பத்தியில் உரத் தட்டுப்பாடு மழையின்மை போன்றவற்றால் இந்த பாதிப்புகள் ஏற்பட்டு இருக்கின்றது.

நாடு மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கும் நேரத்தில் உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது.-என்றார். (அ)

## இந்திய மீனவர்...

தொடர்பில் கலந்துரையாடலை மேற்கொண்டது.

இது தொடர்பில் இரண்டு மீனவ அமைப்பு களின் பிரதிநிதிகளும் கூட்டாக ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

அத்துமீறிய இந்திய இழுவைப் படகுகளின் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள் காரணமாக வடபகுதி மீனவர்களின் கடல் வளமும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

2500 இந்திய இழுவைப் படகுகளை தடை செய்து இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தலைநகர் கொழும்பில் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்திருக்கிறோம்.-என்றனர். (அ)

## கோட்டாபய...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

வெளிநாடுகளிடம் அடிபணியமாட்டோம் என ஆட்சியாளர்கள் சூளுரைத்தனர். ஆனால் இன்று கடன் கேட்டு உலக நாடுகளிடம் மண்டியிடுகின்றனர். நாளாந்த சுற்றுலா வாசிகள்போலவே இந்த அரசு செயற்படுகின்றது. நீண்ட நாள் திட்டம் இல்லை.

பணம் அச்சிடப்படுகின்றது. இதனால் பணவீக்கம் அதிகரிக்கப்படும். சிம்பாப்பே நாட்டில் ஏற்பட்ட நிலைமையே இலங்கையிலும் ஏற்படும். எனவே, முடியாவிட்டால் இந்த அரசு பதவி விலக வேண்டும். முடியுமானவர்களிடம் ஆட்சி கையளிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

## முல்லைத்தீவு...

கொள்ளப்பட்டுள்ளது

ஊழியர் மீது எதோ ஒரு திரவத்தை வீசி தாக்குதல் மேற்கொண்ட நிலையில் அவர் கண்கள் பாதிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்

இந்த சம்பவம் தூர பிரதேசங்களில் இருந்து வனப்பகுதிகளை கடந்து பணிக்கு வரும் ஊழியர்களை கடும் அச்சத்தில் தள்ளியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றி வரும் பெண் சிற்றூழியர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு தன்னுடைய கடமைகளை நிறைவு செய்து நேற்று அதிகாலை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இருந்து கொக்காவில் வீதி, துணுக்காய் எனும் முகவரியில் அமைந்துள்ள தன்னுடைய வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது வனப்பிரதேசத்தில் வீதியில் நின்ற இருவர் ஊழியர் மீது ஏதோ ஒரு திரவத்தை வீசியுள்ளனர்.

இதனால் கண்கள் பாதிக்கப்பட்ட குறித்த ஊழியர் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் செல்ல முடியாத நிலையில் அருகில் இருந்த ஒரு பொதுக் கிணற்றில் சென்று முகத்தை கழுவியபோதும் கண்ணில் பார்வை சீராகாத நிலையில் அந்த பகுதியில் இருந்த ஒரு வீட்டில் தஞ்சம் அடைந்து அங்கிருந்து அவசர தொலைபேசி ஊடாக நோயாளர் காவு வண்டியை அழைத்து மாவட்ட வைத்தியசாலைக்கு சென்றார்.

அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (அ)

## யாழ்ப்பாண...

'நாகவிகாரை அமைந்துள்ள காணியின் ஆரம்பத்தில் சிங்கள வைத்தியர் ஒருவர் வசித்து வந்தார்.

அவர் அங்கிருந்து வைத்தியத் தொழிலையும் முன்னெடுத்து வந்தார்.

தனது வழிபாட்டுக்காக ஒரு அரச மரத்தை நட்டு வழிபாடுகளை மேற்கொண்டு வந்தார்.

அவர் வசித்த காணி எமது வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்கு உரித்தான காணி. காணி ஆவணங்களைச் சீர்தூக்கிப் பார்த்தால் அதன் உண்மைகளை அறியாலம்.

சிலர் நாகவிகாரை காணி யாழ்.மாநகர சபைக்குரியது என்றும், சான்.சபாபதி வழங்கிய காணி எனவும் கூறி வருகின்றனர். அக்கருத்துக்கள் எல்லாம் பொய்யான கருத்துக்களாகும்.

அன்றைய காலத்தில் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் உறவு இருந்தது. அதன் அடிப்படையில் அந்த காணி

வழங்கப்பட்டிருக்காலம் என நினைக்கின்றேன்.

தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த மண்ணாகவும் எமது மண் உள்ளது.

ஆனால் காணியின் பூர்விகத்தை எடுத்துப் பார்த்தால் அது வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்கு உரித்தான காணி.

அது தெளிவாக எனக்குத் தெரியும்.

ஆரியகுளத்தில் அரசமைப்பை மீறியதாக ஆளுநர் கடிதம் எழுதியிருப்பது தவறானது. ஆரியகுளத்தில் எந்த மத விடயங்களும் இருக்கவில்லை. இவ்வாறு இருக்க அரசமைப்பை மீறுவதாக ஆளுநர் மாநகர சபைக்கு எச்சரிக்கை விடுக்கவும் முடியாது-என்றார்.

இதன்போது வடக்கு மாகாண அவைத் தலைவராக ஆளுநருடன் ஆரியகுள விவகாரம் தொடர்பில் பேசியிருக்கின்றீர்களா என தொகுப்பாளர் எழுப்பிய கேள்விக்கு அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் இவ்வாறு பதிலளித்தார்.

'இல்லை. அவர் தான் வந்த விடயங்களைப் பார்க்கின்றார். நான் எனது கடமைகளைச் செய்கிறேன்.

ஆளுநரின் செயற்பாடுகளில் தலையிட விரும்பவில்லை. ஆனால் தமிழனாக, மாநகர சபையின் வரியிறுப்பாளனாக, நீண்ட காலம் மாநகரத்துடன் தொடர்பில் இருந்தவன் என்ற வகையில் பார்த்துக்கொண்டிருக்க முடியாது'என்றார். (அ)

## லசந்த...

அவருக்காக சட்டத் தரணியாக இருந்தவர்தான் இன்று நீதி அமைச்சர். எனவே லசந்த உட்பட படுகொலை செய்யப்பட்ட 41 ஊடகவியலா ளர்களுக்கும் நீதி கிடைக் கும் என எதிர் பார்ப்பது கஷ்டம் என பாராளு மன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் 13ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று மட்டக் களப்பில் அனுஷ் டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவிய லாளர்களுக்கான நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து மட்டு ஊடக அமையத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்,

கொழும்பில் இருக்கும் பல ஊடகங்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்களை அரசு தமது வியாபாரிகளை விட்டு அனைத்தையும் கைப்பற்றும் சில நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன் பல சிரேஷ்ட ஊடகவியலாளர்களுக்கு தொலைபேசி அழைப்புக்களை விடுத்து நீங்கள் இவ்வாறான வேலைகளை தொடர்ச்சியாக செய்வீர்களானால் உங்களை வேலையில் இருந்து நீக்க வேண்டிவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம்.

2022 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக இருக்கும் அவர்தான் அன்று பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர். அவர் 2009 ஆம் ஆண்டு லசந்த விக்கிரமசிங்க கொல்லப்பட்டதன் பிறகு கொடுத்த போட்டி ஒன்றைப் பார்த்திருந்தேன். அப்போது யார் இந்த லசந்த என்று அவர் கேட்டிருந்தார்.

எனக்கும் அவருக்கும் எதுவித பிரச்னையும் இல்லை. ஆனால் அவருக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்ய இருக்கின்றேன் என்றவர்தான் இன்று நாட்டில் ஜனாதிபதியாக இருக்கின்றார். அவருக்காக வழக்கு பேசிய அலி சப்ரி தான் இந்த நாட்டில் நீதி அமைச்சராக இருக்கின்றார்.

ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கு பல அச்சுறுத்தல் இருக்கும் காலப்பகுதியில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். லசந்த மட்டுமல்ல 41 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும். அதேவேளை பொலிஸார் லசந்த கொலை தொடர்பாக வழக்கு தொடரவில்லை.

இருந்தபோதும் நல்லாட்சி அரசாங்கத்தில்கூட அந்த வழக்கை ஆரம்பித்தாலும் திருப்திகரமான முடிவை எந்த அரசாங்கமாக இருந்தாலும் பெற முடியவில்லை என்பது கவலையான விடயம்.

எனவே இனிவரும் காலங்களிலாவது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். கொலை செய்யப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தாலே நீதிமன்றத்தாலே தண்டனை வழங்காவிட்டாலும் இறைவன் தண்டணை வழங்குவான்-என்றார். (அ)

## தமிழர் விடுதலை...

இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்துரையாடிபோது இடைநடுவே ஆனந்தசங்கரி, வெளியேறினார் எனவும் அதன் பின்னர் அங்கு கூடியிருந்த ஏனைய உறுப்பினர்கள் புதிதாக ஒரு தற்காலிகமான ஒரு நிர்வாகத்தை உருவாக்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக நேற்று மாலை 6 மணியளவில் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த கட்சியின் ஒரு பிரிவினர் கட்சிக்கு தற்காலிகமாக புதிய நிர்வாகத்தை தெரிவு செய்ததாக தெரிவித்தனர்.

இதன்போது பங்கேற்று கருத்து தெரிவித்த அக்கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் ச.அரவிந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்காலிகமான நிர்வாகச் செயலாளராக க.கௌரிகாந்தனும் செயலாளர் நாயகமாக க.யோகராஜாவும் புதிய பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட பொதுச்சபைக் கூட்டம் கிளிநொச்சியிலுள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கட்சி தலைமைத்துவத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும் கட்சியின் நிர்வாக நடவடிக்கையை சரியான முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதும் அதற்கு முட்டுக்கட்டையாக செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி செயற்பட்டதன் காரணமாக அந்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

2020ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின் பின்னர் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் பொதுக்கூட்டத்தை கூட்டி கட்சியில் புதிய நிர்வாக மாற்றங்களைக் கொண்டுவந்து கட்சியை தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்து கொண்டு முன் கொண்டு செல்ல வேண்டுமென நாங்கள் எடுத்த முயற்சியை இரண்டு ஆண்டுகளாக கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தை நடத்தாமல் ஆனந்தசங்கரி பலவிதமான முட்டுக்கட்டைகளை போட்டு கொண்டு இன்றுவரை பல இடர்பாடுகளை தோற்றுவித்தார்.

எதிர்வரும் ஜனவரி 29ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி தீர்க்கமான முடிவை எடுப்போம்-என்றார்.

## அரசாங்கத்தை...

ஓவர்கள் போட்டிக்கு நிகரானது எனவும், இதுவரை 20 ஓவர்கள் மாத்திரமே நிறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒன்று அல்லது இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினால், அனைவரும் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் போட்டி இன்னும் முடியவில்லை என்றும் அவர் கூறினார். (அ)

## சீன வெளியுறவு...

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்து 65 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு, சீன வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு இலங்கை வந்துள்ளார்.

தூதுக்குழுவினருடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீன வெளிவிவகார அமைச்சர், பல்வேறு முக்கிய சந்திப்புக்களை மேற்கொள்ள உள்ளார். (அ)

## பெரும்பான்மையை...

அமைச்சரான ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழக்க நேரிடும் எனவும் அவர் கூறினார். (அ)

## சந்திரிகாவுடன்...

முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா அம்மையா ளர் பங்கேற்ற நிகழ்வில் கலந்து கொண்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் எஸ். டபிள்யூ. ஆர்.டி பண் டாரநாயக்கவின் 123 ஆவது ஜனன தினம் நேற் றாகும்.

இதனை முன் னிட்டு கொழும்பிலுள்ள அன்னாரது உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று நடை பெற்றது.

சந்திரிக்கா அம்மையார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பதவி நீக்கம் செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் பங்கேற்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 - 05 - 1934



இறப்பு 05 - 01 - 2022

## திருமதி செல்லத்துரை கனகம்மா

யாழ். இணுவில் கிழக்கு காரைக்காலைப் பிறப்பிட மாகவும், கனடா Montreal ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை கனகம்மா அவர்கள் 05.01.2022 புதன் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற காலிங்கர் - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகாலட்சுமி(இலங்கை), கனகலிங்கம் (சுவிஸ்), ஜெயலக்சுமி(ஜேர்மனி), தர்மலிங்கம் (Montreal), சோதிலிங்கம்(சுவிஸ்), நடேசலிங்கம் (Toronto), விஜயலக்சுமி(ஜேர்மனி), புஸ்பராணி (இலங்கை), அன்னலக்சுமி(ஜேர்மனி), காலஞ்சென்ற காந்தி(இலங்கை), ஞானலக்சுமி(சுவிஸ்), நளாயினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரசாமி (சுவிஸ்), சரோஜினி(சுவிஸ்), சுப்பிரமணியம்(ஜேர்மனி), விஜயலக்சுமி (பானு-Montreal), கதிர்காமராஜா (ஜெர்மனி), புஸ்பநாதன்(ஜேர்மனி), சர்வேஸ்வரன் (இலங்கை), சிவா(சுவிஸ்), மூர்த்தி(சுவிஸ்), செல்வி (சுவிஸ்), வனிதா (Toronto) ஆகியோரின் அன்பு மாமியாரும்,சிவபாக்கியம், சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை கள், கொள்ளுப் பேரப்பிள்ளைகள் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Saturday, 08 Jan 2022 12:00 PM - 8:00 PM
Urgel Bourgie / Athos - Cimetière jardin & Complexe funéraire Montréal 3955 Chemin de la Côte-de-Liesse, Saint-Laurent, QC H4N 2N6, Canada

*கிரியை :*
Sunday, 09 Jan 2022 10:00 AM - 12:00 PM
Urgel Bourgie / Athos - Cimetière jardin & Complexe funéraire Montréal 3955 Chemin de la Côte-de-Liesse, Saint-Laurent, QC H4N 2N6, Canada

*தகனம் :*
Sunday, 09 Jan 2022 12:30 PM
Urgel Bourgie / Athos - Cimetière jardin & Complexe funéraire Montréal 3955 Chemin de la Côte-de-Liesse, Saint-Laurent, QC H4N 2N6, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**நடேசலிங்கம் - மகன்**
**Mobile : +14164515927**

தகவல்:
**குடும்பத்தினர்.**






# பொருள் விலை உயர்வை எதிர்த்து வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஜன. 09

**வவுனியாவில் அத்தியவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. புதிய ஜனநாயக மாக்கசிச லெனினிச கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.**

ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்-

கோட்டாபய அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங் கள் கடந்துள்ள நிலையில் உழைக்கும் மக்கள் நடு வீதிக் குத் தள்ளப்பட்டுள்ளதுடன், அவர்களது வயிற்றில் அடிக் கும் அவலநிலையை இந்த அரசு ஏற்ப்படுத்தியுள்ளது.

இந்தநிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் நாட்டில் பட்டினிச்சாவு ஏற்படும் அபாயநிலை தோன்றுவதை எவராலும் தடுக்க முடியாது. நாட்டை கொள்ளையடித் தவன்,நாட்டுப் பணத்தை திருடியவன் எல்லாம் அதி காரத்தில் இருந்து சுகபோக வாழ்க்கை வாழ்கின்றனர். ஆனால் சாதரண மக்கள் இவர்களுக்கு வாக்களித்த குற்றத்தை தவிர வேறொன்றுமே செய்யவில்லை.

கடந்த தேர்தல் காலங்களில் கோட்டாபயவும் மஹிந் தவும் கொடுத்த வாக்குறுதிகளால் மக்களின் பசியை தீர்க்க முடிந்ததா? எனவே இராணுவமயமாகி வரும் இந் தக் கொடுங்கோல் ஆட்சியை அழித்தொழிக்க நாட்டு மக்கள் ஒன்று திரண்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்ட முன்வரவேண்டும் - என்றனர்.

ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், உழைக்கும் மக்களை பட்டினிபோடாதே, கட்டுப்பாட்டுவிலையை கொண்டுவா, ஊழல் பணத்தை வெளியேகொண்டுவா, உழைப்போரை வதைக்காதே, தேர்தல் வாக்குறுதி என் னாச்சு போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் புதிய ஜனநாயக மாக்கசிச லெனினிச கட்சியின் செயலாளர் சி.கா.செந்தில்வேல், கட்சியின் முக்கியஸ்தர்களான செல்வம் கதிர்காமநாதன், நி.பிரதீபன், தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ந.கருணாநிதி, இலங்கை ஆசிரியர் சங்கத் தின் வவுனியா கிளையின் பா.நேசராஜா, சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பினர் உட்பட பொது அமைப்புக்கள் ஆதரவை வழங்கியதுடன், பெருமளவான பொதுமக் களும் கலந்துகொண்டனர். (அ)

## கல்வியங்காடு வர்த்தகர் மீது நேற்று முற்பகல் வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஜன. 09

கல்வியங்காடு பகுதியில் புடைவை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த 28 வயதுடைய வர்த்த கர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டார். பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் உள்ள முரண்பாடு காரணமாக இந்த வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றது என ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக் கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

## சுசில் பதவி நீக்கப்பட்டதை பிரதமருக்கு கூறிய ஷிரந்தி

கொழும்பு, ஜன. 09

இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டமை வருத்தமளிப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்தவிடம் தெரிவித்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டு பிரதமர் இவ்வாறு தெரிவித்தார் என அறியமுடிகிறது.

இந்நிலையில், இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப் பட்ட விடயத்தை ஷிரந்தி ராஜபக்ஷ ஊடாகவே பிரதமர் அறிந்து கொண்டார் என ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

சுசில் பிரேமஜயந்த அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை தொடர்ந்து, அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அவருக்கு தொலை பேசியில் தொடர்புகொண்டு இந்த சம்பவம் தொடர் பில் வருத்தம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)




# மரண அறிவித்தல்

பிறப்பு 13 - 08 - 1961



இறப்பு 04 - 01 - 2022

## சின்னப்பு கசியானுஸ் (றொனால்ட்)

யாழ். பாஷையூரைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு கசியானுஸ் அவர்கள் 06-01-2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான பர்ணாந்து, அந்தோனிப்பிள்ளை செபஸ்ரி யம்மா மற்றும் மங்க஌ஸ்வரி, லூர்த்தம்மா மணியம், யூசுப்(சின்னவன்) , றெஜினா ஆகியோரின் பாசமிகு சகோ தரரும்,காலஞ்சென்றவர்களான மிக்கேல், துரைராசா (மத்தியாஸ்), அடைக்கலராணி மற்றும் சூசானா, பேர்சி கொன்சி, பொன்னான், லில்லி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**Demonward**
**(Rajan- மருமகன்)**
**Mobile : +491782032865**

தகவல்:
**குடும்பத்தினர்.**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை - தற்காப்புக்கலை
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**
1.00மணி : மழலைகள் நேரம் - சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி - நினைத்தேன் வந்தாய்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : ஊழுகுகுநு WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார் - திறமையாளர்களுக்கான களம்
7.00 மணி : SPOTLIGHT - சி.வி.விக்னேஸ்வரன் - தலைவர் - தமிழ் மக்கள் தேசியக்கூட்டணி



08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : டான் பட்டிமன்றம்



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு